

ஜோன் சி. லெனொக்ஸ்

# கொரோனா வைரஸ் உலகில் தேவன் எங்கே ?

“சரியான சமயத்தில் நித்தியமான உண்மைகளை நினைவூட்டுகின்றார். அன்பு, அக்கறை மற்றும் உள்ளுணர்வுடன் எழுதப்படுகின்றார். எம்முள் பலர் தற்பொழுது போராடிக்கொண்டு இருக்கின்ற கேள்விகள் மற்றும் பயங்கள் என்பவற்றுக்கு ஜோன் லெநொக்ஸ் பதில் தரமுனைகின்றார்.”

**மைக்கல் ரம்ஸ்டென்**, தலைவர், ரவி சக்கராயாஸ் சர்வதேச ஊழியங்கள் (RZIM)

“தற்காலத்துக்குரியதும், தெளிவான, மற்றும் மனதை உருக்கும் இன்றியமையாத விடயங்களையும் உடைய ஒரு நூலாகும். விசுவாசிப்பவர்களுக்கு ஏன் விசுவாசிக்கிறோம் என்பது தொடர்பில் புதுப்பிக்கப்பட்ட உறுதியையும் விசுவாசிக்கப் போகின்றவர்களுக்கு அவர்கள் தேடும் முக்கிய பதில்களைப் பெற்றுக் கொள்ளவும் இந்நூல் உதவும்.”

**கெய்த் மற்றும் கிரிஸ்டீன் கெட்டி**, பாடல் ஆசிரியர்கள்

“கடந்த இரு மாதங்களுள் உலகமானது மாறியுள்ளது. ஜோன் அதிக எண்ணிக்கையிலான நூல்களை எழுதியுள்ளார். ஆனால் இதைப்போன்று ஒரு வார காலத்தினுள் எதனையும் அவர் எழுதவில்லை. குறுகிய காலப்பகுதியில் உருவாக்கப்பட்டதாக இருப்பினும், உலகம் பூராகவும் பரவி இருக்கும் கொரொனோ வைரஸ் பற்றிய வரலாற்று, விஞ்ஞான, இறையியல் மற்றும் தனிப்பட்ட கண்ணோட்டம் என்பவற்றை இந்நூல் வழங்குகின்றமையினால், இந்நெருக்கடியின் மத்தியில் இருக்கும் எமக்கு இந்த சூழ்நிலையை விரிவான கண்ணோட்டத்தில் பார்க்கும்படியாக உதவுகின்றது.

**Dr.டேவிட் க்ரன்ஸ்டன்,** ஒக்ஸ்வார்ட் பல்கலைக்கழகத்தின் அறுவை சிகிச்சை இணைப் பேராசிரியர், க்ரீன் டெம்ப்பிள்டன் கல்லூரியின் நிர்வாக உடன் இணையாளர்.

“மேற்குலகில் ஜோன் லெநொக்ஸினதைப் போன்று தெளிவானதும் ஞானமானதுமான குரல் எதுவும் இல்லை. ஒரு இடைவெளி ஒன்று எடுத்து சிந்திக்க வேண்டும் என்று நினைக்கும் அனைவரும் வாசிக்க வேண்டிய நூலாகும்.”

**ஒஸ் கினஸ்,** எழுத்தாளர், பேசமுடியாதவையும், மூடனின் பேச்சும் (Unspeakable and Fool’s Talk)

“இயக்கமற்ற நிலைக்கு வாழ்வைத் தள்ளியுள்ள பயங்கரமான உலகளாவிய நோய் பரம்பலை நாம் எவ்வாறு எடுத்துக்கொள்ளப் போகிறோம்? தேவன் எங்கே? அவர் இதை எவ்வாறு அனுமதித்தார்? அச்சுறுத்துகின்ற எமது இக்கட்டான நிலை தொடர்பில் பிரதிபலிக்கும் பொருட்டு பேராசிரியர் லெநொக்ஸ் ஆழமான விஞ்ஞான புரிதலையும் அவருடைய ஆர்வமுள்ள கிறிஸ்தவ விசுவாசத்தையும் ஒன்று சேர்த்துள்ளார். இந்த ஆழமான ஆனால் இலகுவாக அணுகக்கூடிய நூலானது அனைத்துக்குமான பதில்களைத் தருகிறதெனக் கோராதபோதிலும் இது நிச்சயமாக பெரிதான கேள்விகளைக் குறித்து பேசுகின்றதுடன், நாம் அனைவரும் இணைந்து முகங்கொடுக்கும் இந்த சவால்களை அர்த்தமுள்ளதாக்கவும் உதவி செய்கின்றது.”

**Dr.பீட்டர் சான்டர்ஸ்,** சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ மற்றும் பல் வைத்திய சங்க மத்திய நிறைவேற்று அதிகாரி (ICMDA)

## ஒப்புதல்

இந்த நூல் தொடர்பில் எனக்கு அநேக வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் நன்றி கூற விரும்புகிறேன்: குறிப்பாக, டிம் தோர்ன்போரோ, த குட் புக் நிறுவனத்தின் பதிப்பு இயக்குனர், அதன் பதிப்பாசிரிய இயக்குனர் கார்ல் லபர்டோன் மற்றும் எனது ஆய்வு உதவியாளரான Dr.சைமன் வென்ஹும் ஆகியோருக்கு நன்றி

Where Is God in a Coronavirus World?
© John C. Lennox, 2020

Published by
The Good Book Company

thegoodbook.com | www.thegoodbook.co.uk
thegoodbook.com.au | thegoodbook.co.nz | thegoodbook.co.in

Unless otherwise indicated, Scripture quotations are from The Holy Bible, New International Version, NIV Copyright © 1973, 1978, 1984, 2011 by Biblica, Inc.

ISBN: 9781784985691 | Printed in the UK

Design by André Parker

கொரோனா வைரஸ் உலகில் தேவன் எங்கே ?

© 2020 தமிழ் மொழிபெயர்ப்பு, கொழும்பு இறையியல் கல்லூரி
Tamil Translation © 2020 by Colombo Theological Seminary

பதிப்புரிமை ஆக்கியோனுக்கே. ஆக்கியோனின் அனுமதியின்றி இந்நூலின் எப்பாகமும் எவ்விதத்திலும் பிரதி பண்ணுதல் கூடாது.

Colombo Theological Seminary
189 Dutugemunu Street, Kohuwela, Sri Lanka
http://www.cts.lk
info@cts.lk

# பொருளடக்கம்


அறிமுகம் 7

1. பாதிப்புக்குள்ளாவதை உணர்தல் 9

2. தலைமைத் தேவாலயங்கள் மற்றும் உலகக் கண்ணோட்டங்கள் 17

3. நாத்திகம் உதவி செய்யுமா? 31

4. அன்பின் தேவன் இருக்கையிலே கொரோனோ வைரஸ் எவ்வாறு காணப்படக்கூடும்? 46

5. அன்பிற்கான ஆதாரம் 63

6. தேவன் உருவாக்கும் வேறுபாடுகள் 72

பின்குறிப்பு 90

*வேதனையில் உள்ள உலகத்திற்காக*

*JCL*

# அறிமுகம்

தனித்துவமான, சகாப்தத்தை வரையறுக்கும் ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகம் தொடர்பிலான எமது கண்ணோட்டங்கள் எதுவாக இருப்பினும், எமது நம்பிக்கைகள் எதுவாக இருப்பினும் எம்முடைய அநேகமான பழைய நிலைப்பாடுகள் நிலைகுலைந்து விட்டது. நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், கொரோனோ வைரஸின் உலகளாவிய பரம்பலானது எம் அனைவருக்குமே பதற்றத்தையும் அமைதியற்ற நிலையையும் தந்துள்ளது. நாம் எவ்வாறு இதைக் குறித்து சிந்தித்து இதனை சமாளிக்கப் போகின்றோம்?

நாம் தற்பொழுது அனுபவிப்பதைக் குறித்த என்னுடைய பிரதிபலிப்புகளையே இந்த நூல் உள்ளடக்குகிறது. நான் இதை ஒரு வாரத்திற்கு முதல் எழுத ஆரம்பித்தேன். அப்பொழுதிலிருந்து சூழ்நிலை துரிதமாக மாற்றமடைந்துள்ளதுடன் இனியும் மாறும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. இங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ள கண்ணோட்டங்கள் என்னுடையவைகள் மாத்திரமேயன்றி இது நான் இணைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் அல்லது நிறுவனங்களுடையவை அல்ல. தவிர்க்க இயலாதபடிக்கு, இதில் நிச்சயமாக சில இடங்களில் சுமுகமின்மையும் குறைவுகளும் காணப்படும். அதற்காக மன்னிப்பு கேட்கிறேன்.

வாசகர்களாகிய உங்களை பின்வரும் மாதிரியில் இந்நூலை வாசிக்கும்படிக்கு அழைப்பு விடுக்கிறேன்: நான் ஒரு தேநீர் கடையில் உங்களுடன் அமர்ந்து இருக்கிறேன் (இது எம்மால் முடியுமாக இருப்பின் மாத்திரேமே!), இந்த புத்தக முன் அட்டையில் உள்ள கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்கிறீர்கள். நான் எனது தேநீர் கோப்பையை கீழே வைத்துவிட்டு நேர்மையான ஒரு பதிலை உங்களுக்குத் தர முயல்கிறேன். இவ்வாறு ஆறுதல், ஆதரவு மற்றும் நம்பிக்கையைக் கொடுக்கும்படியாக நான் கூற முயற்சிப்பவையே கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

# 1. பாதிப்புக்குள்ளாவதை உணர்தல்

இது வழக்கத்திற்கு மாறானதாகும்.

மத்திய எழுபதுகளில் உள்ள நான், எனது மனைவியுடன் வீட்டில் இருந்த வண்ணம், உலகத்தை நிலைகுலைய வைக்கும் கொரோனோ வைரஸின் உலகளாவிய பரவலைத் தவிர்க்கும்படியாக நான்கு மாதங்களுக்கு எம்மை சுய-தனிமைப்படுத்தலில் வீட்டினுள் அடைபட்டு இருக்குமாறு அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் தொலைக்காட்சியில் எமக்கு அறிவுறுத்திக்கொண்டு இருந்தார் (அநேக கொரோனோ வைரஸ்கள் இருக்கின்றன, இது COVID-19 என்று அழைக்கப்படுவதோடு இந்த நூலில் பெரும்பாலும் “கொரோனோ வைரஸ்” என்ற பதத்தையே பயன்படுத்துவோம்). முன்னெப்போதும் இல்லாத வண்ணமாக இந்த உலகளாவிய பரவலானது மிகவும் மோசமானதாக இருக்கக்கூடும் என்பதனை புரிந்துகொள்வது மிகவும் கடினமானதாக இருப்பதோடு, அதன் தாக்கம் குறித்ததான எமது தற்போதைய அனுமானங்கள் யதார்த்தத்தினைப் பார்க்கிலும் குறைவானதாகவே அமைகின்றது. இதன் அளவும் நோக்கமும் ஒரு அநீதியை அல்லது துன்பதை அடிப்படையாக வைத்து எடுக்கப்படுகின்ற திரைப்படத்தைப் (Dystopian Movie) போன்று உள்ளது.

நகரங்கள் மற்றும் நாடுகளில் ஊரடங்கு, எல்லைகளை மூடுதல், போக்குவரத்துகளுக்குத் தடை உத்தரவு பிறப்பித்தல், அத்தியாவசிய தேவைகள் தவிர்த்து மற்றைய அனைத்தையும் தடை செய்தல், பாரிய விளையாட்டு ஒன்று கூடல்களைத் தடை செய்தல் மற்றும் அமைதியான நகரங்கள் பயம் மற்றும் சுய தனிப்படுத்தலிலும் அலறுதலை நாம் இதற்கு முன்பு அனுபவித்து இருக்க மாட்டோம். அத்தியாவசிய மூலப்பொருள்களின் உற்பத்தியானது என்றும் இல்லாத விதத்தில் உயர்வடைந்து இருப்பதினால் இந்த உலகளாவிய நோய்த்தொற்றுப் பரம்பலின் விகிதமானது தேசிய சுகாதார அமைப்புகளில் பாரிய அழுத்தங்களைப் பரப்புகின்றதாக இருக்கின்றது.

சீனாவில் உருவாகிய இந்நோயின் பரம்பலின் மையமாக தற்போது ஐரோப்பா காணப்படுகின்றது.[1] இன்னொரு புறத்தில், தொலைக்காட்சி செய்திகள், வெறிச்சோடிய வீதிகள், கடைகளில் வெறுமையான அலுமாரிகள், வெறுமையான விளையாட்டு அரங்குகள் மற்றும் வெறுமையான திருச்சபைகளைக் காண்பிப்பதோடு மறுபுறத்தில், வைத்தியசாலைகள் நிரம்புகின்றதையும், மேலதிக கட்டில்களுக்கான மேலதிகத் தேவையையும் காண்பிக்கிறது. வேலைகளும், வணிகங்களும் ஆபத்தில் உள்ளன. பயமானது உலகத்தையே பின்தொடர்வதுடன், மக்கள் பாதிக்கப்பட்டு கொண்டு வருகையில் அது நாள்தோறும் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. உலகளாவிய ரீதியிலான பாதிப்புக்குள்ளான நிலையின் அதிகரித்த அளவினை உணர்வதே தற்போதைய முக்கியத் தாக்கமாக இருக்கிறது.

வாழ்வினை அனுமானிக்கக்கூடிய, குறித்தளவு நிலையான ஒரு உலகத்திற்கே எம்முள் அநேகர் பழக்கப்பட்டுள்ளனர். ஆனால் தற்பொழுது அவை அனைத்தும் நொறுங்கிப் போனதாக உணர்கின்றோம். நாம் நம்பி இருந்த காரியங்கள் அகன்று போய்விட்டதோடு, எமது கட்டுப்பாட்டினை மிஞ்சியதாக என்றும் இல்லாத வகையில் நாம் வெளிப்படுத்தப்பட்டு உள்ளோம். மக்கள் தங்கள் சரீர மற்றும் உள ஆரோக்கியம், தங்கள் குடும்பங்கள் மற்றும் நண்பர்கள் மற்றும் குறிப்பாக முதியவர்கள் மற்றும் குழந்தைகள் அவர்களுடைய சமூக வலையமைப்புகள், அவர்களுடைய உணவு விநியோகம், அவர்களது வேலைகள் மற்றும் பொருளாதார பாதுகாப்பு குறித்து பயப்படுகிறார்கள்.

இவ்வாறான தளம்புகின்ற மற்றும் நிலையற்ற காலப்பகுதியில், பொருத்தமைவுகளின் அர்த்தத்தை இலகுவில் இழந்து போகக்கூடும். இருப்பினும் வருடாந்த குளிர் காய்ச்சலினால் ஏற்படும் மரணங்களை ஏற்றுக்கொள்வதில் எம் அனைவருக்கும் ஒரு கடினத்தன்மை உள்ளது. இங்கிலாந்து, பொது சுகாதாரமானது, ஏறத்தாழ கடந்த ஐந்து வருடங்களில் வருடாந்தம் 17,000 மக்கள் காய்ச்சல் மூலம் இறந்துள்ளார்கள் என்று கணிப்பிடுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையமானது ஒக்டோபர் 2019 இலிருந்து மார்ச் 2020 வரையில் இறந்தவர்களின் எண்ணிக்கையை 23,000-59,000 என்று கூறுகிறது. அத்துடன் 2019இல் உலகளாவிய ரீதியில் சாலை விபத்துகளில் இறந்தவர்கள் 1.35 மில்லியன் என்று கணக்கிடுகிறது. இருப்பினும், கொரோனோ வைரஸின், பரந்த வீச்சு மற்றும் அதிவேக வளர்ச்சி

மற்றும் எதிர்பாராத அளவில் பெருந்தொகை மக்களை கொல்லக்கூடிய சாத்தியத்தினைத் தெளிவாக கணக்கிடப்படுவதினால், வேறு அனைத்தைப் பார்க்கிலும் கொரோனா வைரஸானது எம்மை அதிகமாக பயமுறுத்துகிறது. நீங்கள் இதை வாசிக்கையில் கொரோனோ வைரஸினால் இறந்தவர்களின் எண்ணிக்கை இப்போது இருப்பதை விட பாரியளவில் அதிகரித்து இருக்கும் என்பதைக் குறித்து நானும் அவதானமாகவே உள்ளேன்.

ஐக்கிய அமெரிக்காவின் தேசிய சுகாதார நிறுவனத்தின் இயக்குனரான பிரான்சிஸ் கொலின்ஸ் என்பவர், *தி அட்லான்டிக்* நேர்முகக்காணலில் இந்த வைரஸைக் குறித்து அவரை அதிசயிக்க வைப்பது என்ன என்பதைக் குறித்து விளங்கப்படுத்துகிறார்:

> *"குறித்த அளவிற்கு இது மிகவும் துரிதமாக பரவக்கூடியதாகும். சார்ஸ் (SARS)இனைப் பார்க்கிலும் அதிகமாகப் பரவுகின்றது. 18 வருடங்களுக்கு முன்பு SARS ஆனது உலகத்தில் மிகவும் பயங்கரமான அச்சத்தை உடைய சூழ்நிலையைக் கொண்டிருந்தது. இருப்பினும், அது நன்கு பரவக்கூடிய நிலையைக் கொண்டிராததினால் கொரோனோ வைரஸ் கொண்டிருப்பதைப் போன்றதான தொற்று அல்லது மரணங்களை அது கொண்டிருக்கவில்லை. மிகவும் நோய்வாய்ப்பட்ட ஒருவரிடமிருந்தே SARS வைரஸ ானது பரவுகின்றது. இந்த வைரஸானது சிறியளவு நோய்த்தொற்று அல்லது நோய்த்தொற்று இன்றிய நபர்களிடம் இருந்தும் கூட இது பரவுகின்றது..."*[2]

இவற்றுக்கு நாம் எவ்வாறு மாறுத்தரத்தைக் காண்பிக்க வேண்டும்? எந்த வகையிலும் ஈடுபடுதல் சாத்தியமானதா? பதற்றம் மற்றும் ஹிஸ்டீரியாவினை எவ்வாறு தவிர்ப்பது?

## நாம் இதற்கு முன்பு இந்த நிலையில் இருந்துள்ளோம்

கடந்த காலங்களில், இவ்வாறான உலகளாவிய நோய் பரம்பல் இருந்து உள்ளது. இவற்றில் மிகவும் பழமையான பதிவு யாதெனில் கி.பி 165-180 இல் நிகழ்ந்த அண்டோனின் தொற்றுநோய் அல்லது கலனின் தொற்றுநோயாகும். இந்த நோயானது எது என்பது உறுதியற்றதாக இருப்பினும், அது சின்னமுத்து அல்லது பெரியம்மை என்று கருதப்படுகின்றது. ஐந்து மில்லியன் மக்களை அந்நோய் கொன்றுள்ளது. அதன் பின்பு ஜஸ்டீனியன் தொற்றுநோய் நிலவியது (கிபி 541-542). இது விலங்குகளில் (எலிகள்) இருந்து ஈக்களின் ஊடாக மனிதர்களுக்கு பரவுகின்ற மிகவும் வேகமாகப் பரவுகின்ற கொள்ளைநோயாக இருந்தது. 25 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் இறந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

14ஆம் நூற்றாண்டில் (1346-1353) கறுப்பு மரணம் என்று அறியப்பட்ட இன்னுமொரு வேகமாகப் பரவும் கொள்ளை நோயானது யுரேசியாவில் வாழ்ந்த 70 - 100 மில்லியன் வரையிலான மக்களைக் கொன்றது. இது உலக சனத்தொகையில் 20 வீதத்தை குறைத்தது.

பின்பு வரலாற்றில் பின்னைய காலத்தில் 19ஆம் மற்றும் ஆரம்ப 20ஆம் நூற்றாண்டுகளில் சில கொலரா

கொள்ளைநோய்களின் உலகளாவிய பரம்பலினால் மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் இறந்து போயினர். காய்ச்சலுடனான கொள்ளைநோயினால் 1918-1920களில் 20 தொடக்கம் 50 மில்லியன் மக்கள் மரணித்தனர். எனது வாழ்க்கை காலத்திலேயே 1956-1958களில் ஆசிய காய்ச்சலினால் இரு மில்லியன் மக்கள் இறந்தனர். அத்துடன் 1968-1969இல் ஏற்பட்ட ஹோங்கொங் காய்ச்சலினால் ஒரு மில்லியன் மக்கள் இறந்தனர். 2005-2012இல் உச்சத்தில் இருந்த HIV/AIDS நோய்ப்பரம்பலானது 32 மில்லியன் மக்களைக் கொன்றது.[3]

இவை அனைத்தும் உலகலாவிய தொற்றுநோய்ப் பரம்பலாக வகைப்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, இபோலா மற்றும் சார்ஸ் (SARS) போன்ற புவியியல் ரீதியில் தடுக்கப்பட்ட நோய்ப்பரம்பல்கள் (EPIDEMICS) உலகளாவிய தொற்றுநோய் பரம்பலாகத் தகுதிப்படவில்லை. அண்மைக்காலத்தில், 120 வருடங்களுக்கு முன்பு மேற்கத்தேயத்தில் வாழந்த மக்கள் புவியியல் ரீதியில் எல்லைப்படுத்தப்பட்ட நோய்ப்பரம்பல்களான தைபஸ், காசநோய், கொலரா அகியவற்றை நாளாந்த வாழ்வின் பகுதியாகக் கொண்டு வாழ்ந்தனர்.

மிகவும் துரிதமாகப் பரவும் கொள்ளை நோயான கொரோனோ வைரஸானது, விலங்குகளிடமிருந்து ஆரம்பித்து மனிதர்களுக்கு பரவியுள்ளது. இருப்பினும், இது இப்போது 21ஆம் நூற்றாண்டாகும். அண்மைக்காலங்களில் நோய் மற்றும் மருந்துகள் தொடர்பிலான புரிதல் தொடர்பில் பாரிய மேம்பாடுகள்

ஏற்பட்டு வந்துள்ளது. இதுவே இந்த உலகளாவிய நோய் பரவலானது நிச்சயமாக வரலாற்றுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்று ஏகோபித்ததாக மக்கள் கற்பனை செய்யும்படிக்கு தாக்கம் செலுத்தி இருக்கும். இப்பொழுதுதான் அவ்வாறு இல்லை என்பதை உணர நாம் ஆரம்பித்து உள்ளோம். இந்த புதிய சூழ்நிலைக்கு நாம் எவ்வாறு மாறுத்தரத்தைக் காண்பிக்கப் போகின்றோம்?

## தேவன் உள்ளாரா?

கடந்த காலங்களில், மேற்குலகில் நிகழ்ந்த தேசிய அனர்த்தங்களின்போது மக்கள் திருச்சபைகளுக்கு திரண்டு சென்றதுடன், தேசியத் தலைவர்கள் ஜெபத்திற்கான அழைப்புகளை விடுத்து இருந்தார்கள். இவ்வாறான நிகழ்வுகள் தற்காலத்தில் அரிதாகவே உள்ளபோதும், சில தேசியத் தலைவர்கள் ஜெபத்திற்காக அழைப்பு விடுத்துள்ளனர். அதேபோல உலகம் பூராகவும் உள்ள திருச்சபைத் தலைவர்களும் அழைப்பு விடுத்துள்ளார்கள். “இன்றிலிருந்து ஆரம்பித்து தொடர்ச்சியாக இதனை முழுமையான தேவைப்பாடாக பார்க்கின்ற, ஜெபம் செய்கின்ற அனைவருக்கும் என்னுடைய அழைப்பை விடுக்கிறேன்” என்பது தென்னாபிரிக்காவின் தலைமை நீதிபதியாகிய மோகோங்கின் நினைவில் கொள்ளத்தக்க கோரிக்கையாகும்.”[4]

ஆனால் தற்காலத்தில், தங்களுடைய வாழ்வில் எது நிகழ்ந்தாலும் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான மக்களே தேவனைப் பற்றிய ஏதோவொரு எண்ணப்பாட்டினைக் கொண்டிருக்கிறார்கள். வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் உலகம் பூராகவும்

திருச்சபைகள் மூடப்பட்டுள்ள நிலையில், தேவன் எங்கே?, அவர் உண்மையிலேயே இருக்கிறாரா? சுய தனிமையில் அணுக இயலாத விதத்தில் உள்ளாரா? எங்கேயிருந்து அல்லது யாரிடமிருந்து உண்மையான ஆறுதலை அல்லது நம்பிக்கையை நாம் பெற்றுக்கொள்ளக்கூடும்? என்று அநேகர் வினவுகின்றார்கள்.

# 2. தலைமைத் தேவாலயங்கள் மற்றும் உலகக் கண்ணோட்டங்கள்

நெருக்கடியான நேரங்களில், நாம் எதிர்பார்க்கும் ஒரு விடயம் நம்பிக்கையாகும். 10ஆம் திகதி மார்ச் 2020இன் *நியூயோர்க் டைம்ஸ்* பத்திரிகைக் கட்டுரையில் இத்தாலிய பத்திரிகையாளரான மாடியா பெராரெசி பின்வருமாறு எழுதினார்:

*"ஆசீர்வதிக்கப்பட்ட நீரானது கரத்தின் தூய்மை யாக்கியும் அல்ல, ஜெபமானது தடுப்பூசியும் அல்ல... ஆனால், விசுவாசிகளுக்கு, சமயமானது ஆவிக்குரிய குணமாக்கல் மற்றும் நம்பிக்கையைத் தரும் அடிப்படை மூலாதாரமாகும். நல்-வாழ்வுடன் இணைக்கப்பட்ட பகுதியாக அமையும் இது, சிந்தை மற்றும் உணர்வு ரீதியான ஆதரவை வழங்குகின்ற அவநம்பிக்கைக்கு எதிரான தீர்வாக அமைகின்றது. (தனிமைக்கான மாற்று மருந்தாக இது அமைவதோடு, எமது காலத்தில் காணப்பட்ட மிகவும் கவலைக்குரிய பொது சுகாதார பிரச்சனைகளுள் ஒன்று என்று சில மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காண்பித்தும் உள்ளனர்). "ஆழமான நிலையில், ஆராதிப்பவர்களுக்கு, சமயமே அவர்களுக்கான அர்த்தத்தை வழங்கும் மூலாதாரமாக அமைகிறது. முழுமையாக அர்த்தமுள்ளதாக இருப்பதும், சில*

*சமயங்களில் விசேஷமாக துன்பங்கள் மற்றும் உபத்திரவ காலங்களில் அர்த்தமுள்ளதாக இருப்பதுவுமே அனைத்து மதங்களின் ஆழமான கோரிக்கையாக அமைகின்றது. இவ்வாறான கோரிக்கைகளை முக்கியமானவையாக எடுக்கின்றபோது, உடல் ரீதியான ஆரோக்கியமானது, பாரிய நோக்கம் அற்றதாக இருப்பின், அது பெறுமதியற்றதாகவே தென்பட ஆரம்பிக்கும்."*[5]

வாழ்கையை அனுமானிக்கக்கூடியதாகவும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்போது, பெரிய கேள்விகளைக் கேட்பதுவோ அல்லது எளிமையான பதில்களுடன் திருப்தியடைவது இலகுவானதாக அமைகிறது. ஆனால் எம்முள் ஒருவருக்குக் கூட வாழ்க்கை அவ்வாறாக இல்லை. உங்கள் விசுவாசம் அல்லது நம்பிக்கை அமைப்பு எதுவாக இருப்பினும் வாழ்வு பற்றிய முக்கிய கேள்விகள் வெளிப்புறத்தினூடாக உள்ளே சென்று கவனத்தை ஈர்க்கின்றது என்பது ஆச்சரியமானதொன்று அல்ல.

கொரோனோ வைரஸானது எம் அனைவரையும், வேதனை மற்றும் துயரத்தை எதிர்கொள்ள வைக்கின்றது. எம்முள் அநேகருக்கு வாழ்வின் கடினமான பிரச்சனைகளுள் ஒன்றாக இது உள்ளது. இவ்வேதனையை நிஜமாக அனுபவித்தலானது, எளிமையான பதில்கள் தொடர்பில் சந்தேகத்தை வருவிப்பதோடு, அதனை இலகுவில் ஒப்புக்கொள்ள இயலாத நிலையை உருவாக்குகிறது.

இந்த வகையான "பதில்களை" புறக்கணித்து,

அனைத்து விடயங்களையும் கொரோனா வைரஸ் மாற்ற ஆரம்பித்தது முதல், இந்தக் கடினமான கேள்விகளுடன் போராட எனக்கு உதவி செய்த சில எண்ணக்கருக்களுக்கூடாக என்னால் இயன்றளவு நேர்மையாக உங்களுடன் சிந்திப்பதையே, நான் இங்கு செய்ய முயற்சிக்கிறேன்.

## பாழாக்கப்பட்ட தேவாலயங்கள்

துன்பங்கள் பற்றிய கேள்விகளைக் கொண்ட அநேக நூல்கள் இருக்கின்றபோது எமக்கு ஏன் இன்னொரு நூல் அவசியமாகின்றது? என்று நீங்கள் கேட்கக்கூடும். இதற்கான பதில் என்னவெனில், அநேகமாக இத்தகைய தார்மீகத் தீமையின் பிரச்சனை தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. மாறாக இந்த நூலானது, இயற்கையான தீமையின் பிரச்சனை என்பது தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. அதாவது, முக்கியமாக, கொரோனோ வைரஸ், மற்றும் அது போன்ற நோய்கள் மற்றும் பூமி அதிர்வுகள் மற்றும் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் போன்ற முறிவுற்ற இயற்கையிலேயே எனது கவனம் இருக்கிறது.

வேதனையும் துன்பமும் இரு வேறுபட்ட மூலாதாரங்களில் இருந்து வருகின்றது. மனிதர்கள் (நேரடியாக) பொறுப்பாகாத இயற்கை அனர்த்தங்கள் மற்றும் நோய்களின் விளைவால் முதலாவது துன்பங்கள் ஏற்படுகின்றது: பூமியனர்த்தம், சுனாமி, புற்றுநோய் மற்றும் கொரோனோ வைரஸ் போன்றவை, துன்பம் அல்லது இயற்கையான தீமையின் பிரச்சனை என்று பெரும்பாலும்

அழைக்கப்படும் ஒன்றினை நோக்கி அழைத்து செல்கின்றது. “தீமை” எனும் வார்த்தையானது தார்மீக தாற்பரியத்தைக் கொண்டிருப்பதினாலும், பூமியனர்த்தமோ அல்லது வைரஸ்களோ தார்மீக ஊடகங்களாக இல்லாது இருப்பதினாலே, பயன்படுத்தப்படும் இந்தப் பதமானது துரதிஷ்டவசமான ஒன்றாக அமைகின்றது.

இரண்டாவதாக, ஆண்களும் மற்றும் பெண்களும் நேரடியாக பொறுப்பேற்கும் துன்பங்கள் உண்டு: வெறுப்பின் செயற்பாடு, பயங்கரவாதம், வன்முறை, துஷ்பிரயோகம் மற்றும் கொலை. இவை தார்மீக தீமையின் பிரச்னைக்கு வழிநடத்திச் செல்கின்றது.

நியூசிலாந்தின் கிறைஸ்ட் திருச்சபை தலைமைத் தேவாலயம், இங்கிலாந்தின் கவன்ரி தேவாலயம் மற்றும் ஜெர்மனியின் ட்ரேஸ்டெனின் பிரவுன்கிரிச் என்பவை இந்த இரு பிரச்சினைகளுக்குமான பலமான மற்றும் கடுமையான அடையாளமாக அமைகின்றது. இந்த மூன்றும் மேற்குறித்த இரு விடயங்களின் சுவடுகளை சுமக்கும் வகையில் திருச்சபை கட்டடங்கள் பாழாக்கப்பட்டுள்ளது. ஒரு புறத்தில், அவை கொண்டிருந்த அழகு மற்றும் நேர்த்திக்கான ஆதாரங்களை அவை காண்பிக்கின்றன. இன்னொரு புறத்தில், அவை அனர்த்தங்களினால் ஏற்பட்ட ஆழமான தழும்புகளினால், சிதைந்து போயுள்ளன. கிரைஸ்ட் திருச்சபையில் நிகழ்ந்த பூமி அதிர்வு மற்றும் உடன்படிக்கை மற்றும் ட்ரெஸ்டென் திருச்சபைகளில் நிகழ்ந்த குண்டுவெடிப்புகள் என ஒவ்வொன்றினால் தேவாலயங்கள் சிதைந்துள்ளமையினால் அவை அழகு மற்றும் சிதைவு ஆகிய இரண்டையும் ஒருமித்ததாக

நிகழ்காலத்தில் காட்சிப்படுத்துகின்றன.

பேரழிவினால் எழும் அத்தியாவசிய ஆழமான கேள்விகளுக்கு எந்தவொரு இலகுவான பதில்களும் இல்லை என்பதை இவை இணைந்து எமக்கு நினைவூட்டுகின்றன. அந்த நேரத்தில் இருந்த அநேகருக்கு இந்தக் காட்சியானது முழுமையற்றதாக மிகவும் வெளிப்படையானதாகத் தோன்றியது. மற்றவர்களான இந்த உடனடி வேதனைக்கு வெளியில் நின்று பார்ப்பவர்கள் அவர்கள் தொடர்பில் போதுமான அளவு பட்சபாதத்துடன் இருப்பது இல்லை.

இருப்பினும், கிறைஸ்ட் திருச்சபை மற்றும் கவன்ரி திருச்சபை இடையில் வித்தியாசங்கள் உண்டு. கிறைஸ்ட் திருச்சபையின் தேவாலயமானது, புவியியல் தட்டுகளின் நகர்வுகளின் காரணத்தினால் சிதைவடைந்தது. உடன்படிக்கை மற்றும் டிரெஸ்டென் தேவாலயங்கள் போரின் விளைவினால் சிதைந்து போயின. சிலர் கிறைஸ்ட் திருச்சபை பூமி அதிர்ச்சியை 9/11 இற்கு ஒப்பிட்டனர். ஏனெனில், இது அதனை ஒத்த அதிர்ச்சி அலைகளையே தேசம் பூராகவும் கொண்டு சென்றது. ஆனால் ஒரு பெரிய வித்தியாசம் ஒன்று உண்டு. இரட்டை கோபுரத்தின் சிதைவானது இயற்க்கை அனர்த்தமன்று. அது ஒரு தார்மீக நெறி சார்ந்த அனர்த்தம். மனித தீமையினால் விளைவான ஒன்றாகும். அதேசமயத்தில், பூமியதிர்வுகள் இயற்கையானவை, தார்மீக பேரழிவுகளல்ல.

ஆனால், தார்மீக மற்றும் இயற்கையான தீமைகள் சில நேரம் இணைக்கப்பட்டதாக உள்ளது. ஒன்று இன்னொன்றுக்கு வழிவகுப்பதினால் இந்த சூழ்நிலையானது

சிக்கலானதாக அமைகின்றது. பேராசையுள்ள வர்த்தகக் காடழிப்பதானது, பாலைவனமாக்கலுக்கு வழிவகுக்கின்றது. இச்செயல் போஷணைக் குறைபாடு மற்றும் நோய் ஆகியவற்றுக்கு இட்டுச் செல்கின்றது. ஆனால், கொரோனோவின் எதிர்பாரா கிளர்ச்சியானது இயற்கையான தீமையாகக் காணப்படுகின்றது (பயத்தினால் சுயநலமாகக் கொள்வனவு செய்தல் மற்றும் உணவுப் பொருட்களைப் பதுக்குதல் போன்ற தார்மீக தீமைகளும் இத்துடன் மறைந்து காணப்படுகின்றது). தவிர்க்க முடியாத விதமாக, சதி செய்யும் கொள்கைப்பரப்பாளர்கள் சில மனித ஊடகங்களின் மீது பழி சுமத்த நாடுகிறார்கள். வைரஸ் பரவலில் மனிதர்கள் ஈடுபட்டுள்ள போதிலும், இது விரும்பியோ அல்லது சுயநலமாகவோ செய்யும் ஒன்றல்ல. அத்துடன் விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு வைரஸானது பாய்ந்துள்ளது என்ற முக்கிய அனுமானம் காணப்படுகின்றது.

பேரழிவினை ஏற்படுத்தும் புதிய வைரஸ் பற்றிய அறிக்கைகளை சீனாவின் அதிகாரிகள் முதலில் மறைத்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளது என்று கூறப்பட்டது. ஹாங்காங்கிலிருந்து 11ஆம் திகதி மார்ச் 2020இல் கார்டியன் பத்திரிகையில் வெளியான லிலி கோவின் அறிக்கை பின்வருமாறு:

*“சீன அரசாங்கத்தின் அதிகாரபூர்வ அறிக்கைகளில் அடையாளங் காணப்பட்ட முதலாவது உறுதி செய்யப்பட்ட நோயாளி டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளார் என்று உலக சுகாதார ஸ்தாபனம் பதிவு செய்துள்ளது. டிசெம்பர் மாதத்தின்*

*இறுதியில் சக பணியாளர்களுக்கு இந்த புதிய நோயைக் குறித்து எச்சரிக்கை பண்ண முயற்சித்த வைத்தியர் கண்டிக்கப்பட்டார். ஜனவரி 21 வரையில் மனிதனுக்கு மனிதனுடனான பரவல் உள்ளது என்பதை அதிகாரிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவில்லை."* [6]

டிசெம்பர் 2019இல் கொரோனோ வைரஸ் பற்றிய எச்சரிக்கையை எழுப்பிய சீனாவின் நாயகனாக உயர்த்தப்பட்ட வுஹான் கண் மருத்துவரான Dr லி வென்லியங், இரு மாதங்களின் பின்பு இந்த தொற்றினால் பீடிக்கப்பட்டதனால் இறந்து போனார்.

கொரோனோ வைரஸ் தொடர்பிலான ஒவ்வொரு நாட்டின் செயல்பாடுகள் தொடர்பிலும் குற்றச்சாட்டுகளும் எதிர் குற்றச்சாட்டுகளும் மிக விரைவில் எழுந்த வண்ணமாக இருப்பினும், அது எதுவுமே இந்த நெருக்கடியை கையாள உதவி செய்யாது. அத்தோடு, எவ்வாறு தனிப்பட்ட ரீதியில் மாறுத்தரத்தைக் காண்பிக்க வேண்டும் என்பது தொடர்பிலும் உதவி செய்வது இல்லை.

நாம் எவ்வாறு மாறுத்தரத்தைக் காண்பிக்கப் போகின்றோம் என்பதானது, எமது கண்ணோட்டம் எவ்வாறு உள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பது தவிர்க்க முடியாததாகும். அவசர சிகிச்சை பிரிவில் வாழ்வா சாவா என்பதற்கு இடையில் போராடும் தொற்றுக்குள்ளான ஓர் வயோதிப பெண்ணிற்கு கொரோனோ வைரஸ் பற்றிய எண்ணப்பாடானது அவளுக்கு சிகிச்சை வழங்கும் வைத்தியர் அல்லது அவரை சந்திக்க முடியாமல் இருக்கும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள்

அல்லது அவருக்கு உதவி செய்ய முயற்சிக்கும் போதகருக்கும் வித்தியாசமானதாகவே இருக்கும். அத்துடன் எம்முள் அநேகருக்கு, நாம் கொண்டிருக்கின்றோமா அல்லது கொண்டிருந்தோமா மற்றும் இன்னுமொருவருக்கு நாம் கடத்திவிடுவோமா அல்லது கடத்தியிருப்போமா என்பது இன்னுமொரு கரிசனையாக இருக்கின்றது.

கொரோனோ வைரஸ் தொடர்பில் நாம் அறிவுபூர்வமாக, உணர்வு பூர்வமாக மற்றும் ஆவிக்குரிய ரீதியிலென மூன்று வழிகளில் அர்த்தத்தை ஏற்படுத்தல் வேண்டும். அனைத்தும் முக்கியமானவை. இவை ஒன்றிணைந்து வல்லமையான சவாலை ஒருவருக்கு முன்வைக்கின்றது.

நாங்கள் அனைவருமே அறிபூர்வமான தெளிவினை பெற விரும்புவதால், என்ன நடக்கின்றது என்று புரிந்து கொள்ள உதவுகின்ற புதிய சில தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையுடன் அநேக மக்கள், செய்திகளை பார்ப்பதிலும், இணையத்தளத்தைத் துளாவுவதிலும் நேரத்தை செலவழிக்கிறார்கள். எவ்வாறாயினும், அறிவுபூர்வமான பகுப்பாய்வுகள் கண்ணீரினூடாக ஊடுருவாது. எவ்வாறு ஒருவர் இதனை அர்த்தமுள்ளதாக்குவார் அல்லது அர்த்தமுள்ளது அல்லவெனில், ஒருவேளை பேரழிவு தரும் மாற்ற முடியாத சூழ்நிலைகளில், நம்பிக்கையை எவ்வாறு வருவிப்பது? என்ற இந்த ஆழமான கேள்விகள் முடிவற்ற ஆற்றினுள் பாய்வதாக உள்ளதுடன் நீங்கள் இதை வாசிக்கின்றபோது அவை ஒருவேளை உங்களுக்கு வேகமாக பாய்கின்ற நீரோட்டமாக அமையக்கூடும். இது ஏன் எனக்கு அல்லது அவர்களுக்கு நிகழ்ந்தது? அவர்கள் ஏன் தொற்றுக்கு

உள்ளாக்கப்பட்டு இறந்து போனார்கள் அல்லது நான் ஏன் காப்பற்றப்பட்டேன்? என்னுடைய சரீர மற்றும் உள வேதனைகளுக்கான ஆறுதலை நான் எங்கே பெற முடியும்? நம்பிக்கை எதுவும் உண்டோ?

## வேதனை எதை நடப்பிக்கிறது?

மனித அனுபவமும் அடிப்படை மருத்துவமும் எமது வாழ்வில் வேதனையானது முக்கிய பங்கை வகிக்கின்றது என்று கற்பித்தன. முதலில், வேதனை ஆபத்து ஒன்றை குறித்து எம்மை எச்சரிக்கின்றது. உதாரணமாக, நீங்கள் உங்கள் கையை நெருப்பிற்கு மிக அருகில் வைக்கையில் உங்கள் நரம்புத் தொகுதி உங்கள் மூளையை விழிப்புறச் செய்து நீங்கள் வேதனையை உணர்வதினால், அது உங்கள் கையை எடுக்கும்படி செய்வதினால் அது காயத்தில் இருந்து உங்களை பாதுகாக்கின்றது. இதன்படி வேதனை அனைத்தும் தீயது என்று நாம் கூறிவிட முடியாது.

இரண்டாவதாக, சரீர விருத்தியின்போது ஒரு சிறிய அளவிலான வேதனை ஏற்படுகிறது . உதாரணமாக தடகள வீரர்கள், மலையேறுபவர்கள் அல்லது அமெரிக்கன் கால்பந்து, பிரித்தானிய ரக்பி மற்றும் குத்து சண்டை போன்ற சரீர ரீதியில் பலமான விளையாட்டுக்களில் விளையாட்டு வீரர்கள் சிறந்து விளங்கும் படிக்கு பாரியளவு வேதனையை ஏற்க வேண்டியதாக இருக்கும்.

மூன்றாவதாக, ஆழமான நிலையில் துன்பமும் வேதனையும் குணாதிசயத்தை வடிவமைக்க பங்களிப்பு

செய்கின்றது. துன்ப நிலையில் ஏற்படும் எதிர்ப்பாற்றல் மற்றும் வலிமை குறித்ததான அநேக உதாரணரங்கள் உள்ளன. இது சிறந்த தகுதியுடைய குணாதிசயங்களை வடிவமைக்கிறது. ரஷ்ய எழுத்தாளரான பியடோர் டோஸ்டோவ்ஸ்கி கொண்டிருந்த அவருடைய குணாதியம் தொடர்பில் இது உண்மை என்று ரஸ்கொள்நிக்கோவ் கூறுகின்றார்: துன்பத்தினூடு செல்லாத சிறந்த மனிதர்களை அவரால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை என்பதாக கூறுகிறார். “மிகுந்த புத்திக்கூர்மையையும் ஆழமான இருதயத்தையும் கொண்டிருப்பதற்கு வேதனையும் துன்பமும் எப்போதும் தவிர்க்க முடியாததொன்றாக அமைகின்றது.” [7]

பெற்றோர்கள் இதைக் குறித்த விழிப்புணர்வைக் கொண்டிருக்கிறார்கள். எப்போதாவது இருந்து விட்டு, தங்கள் பிள்ளைகளுக்கு இறுதியில் பயனளிக்கக்கூடிய வகையில் ஒரு வேதனையைத் தரக்கூடிய அனுபவத்தினூடு செல்ல அனுமதிப்பர். இது அவர்கள் தமது சொந்த வாழ்விலிருந்து அறிந்து கொண்ட விடயமாகும்.

நான் இதைக் குறித்து அதிகமான அனுபவங்களைக் கூற முயலேன். இருப்பினும் எனது தனிப்பட்ட ரீதியான ஒரு அனுபவமொன்றினைப் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதிக்கவும். சில வருடங்களுக்கு முன்பு என்னுடைய மார்பில் உண்டான வேதனையானது எதுவோ ஒன்று தவறாக போகின்றது என்பதைக் கூறியது. நான் வைத்தியசாலைக்கு விரைந்தேன். அங்கு சூழ்நிலையானது தீவிரமானதாகக் கருதப்பட்டபடியினால் எனது மனைவியிடம்

இருந்து விடைபெற வேண்டியதாயிற்று. திறனுடைய சிகிச்சைகள் என்னை மரணத்திற்கேதுவான வீரியமான மாரடைப்பில் இருந்து காப்பாற்றியது. ஒரு வகையில் கூறப்போனால், எனது இருதயத்தில் பூமி அனர்த்தத்தை அனுபவித்தேன்.

இவ்வாறான அனுபவங்கள் ஒருவரையும் மாற்றாமல் விடாது. என்னைப் பொறுத்தவரையில் அது எனக்கு அதிகளவு கற்பித்தது. நான் இறக்கக் கூடியவன் மற்றும் நான் பலவீனமானவன் என்பதை அது எனக்கு கற்பித்தது. மற்றும் நான் பொக்கிஷமாகப் பாதுகாக்க வேண்டிய பரிசாக எனக்கு என்னுடைய வாழ்வு திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் இப்போது உணர்கின்றேன். அதுவே, என்னுடைய அர்த்தத்தில், நோக்கம் மற்றும் அழைப்பு என்று கூறப்படுபவைக்கு என்னை துரிதமாகக் கொண்டு வந்தது.

## பேரழிவுகளும் உலகக் கண்ணோட்டங்களும்

எனக்கு மரணத்தை விளைவிக்கக்கூடிய மாரடைப்பின் அந்தக் காலகட்டத்திலேயே எனது சகோதரி, வீரியமிக்க மூளைப் புற்றுநோயில், (அண்மையில்) திருமணமாகிய அவளது 22 வயதான மகளை இழந்தார். நான் குணமானதைக் குறித்து நான் தேவனுக்கு நன்றி சொல்லுவேனாகில்- நான் அவ்வாறு செய்தால்- தேவனைப் பற்றி எனது சகோதரியிடம் என்ன கூறுவேன்? அத்துடன், எந்தவொரு சாதகமான பரிமாணங்களையும் கொண்டிராத ஆனால் சலிப்பூட்டும் பேரழிவை மாத்திரம் கொண்டுள்ள கொரோனோ வைரஸானது உலகம் பூராகவும்

ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தாக்கத்தில் தேவனைக் குறித்து நான் என்ன கூறுவேன்?

எம்முள் அநேகருடைய சிந்தையுடன் ஒத்துப்போகின்ற ஒரு மடலை சி.எஸ். லூவிஸ் ஒருமுறை எழுதியிருந்தார்:

*"அனைத்து படைப்புகளின் துன்பங்களையும் (பிரச்சனைகள்) அவைகளை எல்லைக்குட்பட்ட ஜீவராசிகளாக (சுய சித்தமுள்ள) தேவர்களாக மாற்றும் செயன்முறைக்குத் தேவை என்பதினால் தேவன்தாமே இறங்கி வந்து பகிர்ந்து கொள்கிறார் என்பதை நம்புவது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கின்றது."*[8]

இப்போது நாம் இந்த கொரோனோ வைரஸினை இந்தப் பட்டியலினுள் சேர்த்துக்கொள்ள முடியும்.

ஒரு காலத்தில் நாத்திகனாக இருந்து பின்பு இடைக்கால வயதில் கிறிஸ்தவனாக மாறி வேதனை, துன்பம், மற்றும் தீமையின் பிரச்சனைகளை தன்னுடைய இரு நூல்களான *"தி ப்ராப்லம் ஒப் பெய்ன்"* மற்றும் "*எ கிரீவ் ஒப்சேவ்ட்*" என்பவற்றில் கண்டறிந்தவராக உள்ளார். இந்த ஆழமான பிரச்சனைகள் தொடர்பிலான எம்முடைய மனப்பாங்குகளாவன, வாழ்வு, மரணம் மற்றும் வாழ்வதற்கான அர்த்தம் தொடர்பிலான பெரிய கேள்விகள் பற்றி நாம் ஒவ்வொருவரும் கொண்டுவரும் சிந்தையும் அனுபவமும் பல வருடங்களாகக் கட்டப்பட்ட கட்டமைப்புகளான எமது உலகக் கண்ணோட்டத்தினால் செல்வாக்கு செலுத்தப்படுகின்றது என்ற உண்மையை அந்த இரு நூல்களும் காண்பிக்கின்றன. குறைவாகவோ

அல்லது அதிகமாகவோ நாம் இதைக் குறித்து சிந்தித்திருப்பினும் நாம் அனைவருமே இவ்வாறான ஒரு கட்டமைப்பினைக் கொண்டிருக்கிறோம்.

ஜேம்ஸ் சையர், "*தி யுனிவர்ஸ் நெக்ஸ்ட் டோர்*" என்று தலைப்பிடப்பட்ட மிகவும் உபயோகமான நூலில், உலகக்கண்ணோட்டம் தொடர்பிலான முக்கியமான மூன்று குடும்பங்கள் உள்ளன என்று சுட்டிக் காண்பிக்கிறார்.[9] முதலாவதாக, ஆபிரகாமின் சமயங்களினால் கைகொள்ளப்படும் யூத சமயம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய மூன்று தெய்வ நம்பிக்கை சார்ந்த உலகக்கண்ணோட்டம் ஒன்று உள்ளது. உலகத்தை படைத்து அதை ஆதரிக்கும் தேவன் ஒருவர் இருக்கிறார், அவரே மனிதனை தமது சாயலில் படைத்தார் என்று இது கற்பிக்கிறது. (நான் உலகக்கண்ணோட்டங்கள் என்பதில் "குடும்பங்கள்" என்று மேலே குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள்: ஒவ்வொரு வகையிலும் மிகவும் முக்கியமான வேறுபாடுகள் உள்ளன.) தமது பரிசுத்த புத்தகத்தை முக்கியமாகக் கருதும் எந்தவொரு யூதனோ, கிறிஸ்தவனோ அல்லது இஸ்லாமியனோ இதை உங்களுக்குக் கூறுவார்கள்.

இரண்டாவதாக, இந்த அண்ட சராசரம் மாத்திரமே உள்ளது. இதைப் பார்க்கிலும் தெய்வ நம்பிக்கை தொடர்பிலான பரிணாமங்கள் எதுவுமேயற்ற நாத்திக உலகக் கண்ணோட்டமானது முதல் கூறியதற்கு நேர் எதிர்மாறான தத்துவக்கோட்பாட்டு அணுகுமுறையைக் கொண்டதாகும். இயற்கைக்கு அப்பாற்பட்ட எதுவும் இல்லை. மூன்றாவதாக, தேவன் மற்றும் உலகம் ஆகிய

இரண்டையும் இணைக்கும் ஒரு ஆட்தன்மையற்ற அனைத்து இறைக்கோட்பாட்டு உலகக் கண்ணோட்டமாகும்.

யதார்த்த அல்லது அஞ்ஞானவாதக் கண்ணோட்டங்களை எடுக்கும் மக்களும் இருக்கிறார்கள் என்பது தொடர்பில் நான் அவதானமாகவே உள்ளேன். ஆனால் எந்தவொரு நபரும் எல்லா விடயங்கள் தொடர்பிலும் யதார்த்த அல்லது அஞ்ஞானவாதத்துடன் இருப்பது இல்லை. ஆழமாக செல்கையில் சற்று முன்பு குறிப்பிடப்பட்ட இந்த மூன்று கண்ணோட்டங்களினுள்ளேயே அநேகமான மக்கள் பொருந்துகின்றதைக் காணக்கூடியதாக உள்ளது.

நானும் இந்த அமைப்பினுள்ளேயே பொருந்துகிறேன். எனக்கும் ஒரு உலகக் கண்ணோட்டம் உண்டு. நான் ஒரு கிறிஸ்தவனாகையால், கொரோனோ வைரஸ் போன்ற இயற்கை அனர்த்தங்கள் தொடர்பிலான பிரச்சனைகள் பற்றி வேறு எங்கும் கண்டடைய முடியாத சில விடயங்களை கிறிஸ்தவம் கூறுகின்றது என்று நான் ஏன் நினைக்கின்றேன் என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் என்னுடன் உடன்படக்கூடும் அல்லது உடன்படாமல் விடக்கூடும். ஆனால், இந்த நூலின் இறுதியில், மரணமானது துரிதமாக நெருக்கிய நிலையற்ற உலகத்திலும் கூட, ஏன் கிறிஸ்தவர்களால் நம்பிக்கை குறித்து தைரியமாகப் பேச முடிகின்றது என்றும், எவ்வாறு அவர்களால் சமாதானத்தை உணர முடிகின்றது என்றும் புரிந்து கொள்வீர்கள்.

# 3. நாத்திகம் உதவி செய்யுமா?

கொரோனோ வைரஸ் கொள்ளைநோய் மற்றும் பூமி அனர்த்தங்கள் அல்லது சுனாமி போன்ற பேரழிவுகள் தொடர்பில் நீங்கள் எவ்வாறு மாறுத்தரத்தைக் காண்பிக்கிறீர்கள் என்பதிலேயே உங்கள் உலகக்கண்ணோட்டம் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக, நியூசிலாந்து அனர்த்தத்தின்போது அநேக தெய்வக் கோட்பாட்டாளர்கள் சங்கீதம் 46இன் வார்த்தைகளின் பிரகாரம் தேவன் மீது தாம் கொண்டுள்ள விசுவாசத்தை உறுதிப்படுத்தினர்.

*"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்"*

(வசனங்கள் 1-3)

கொள்ளைநோய்கள், பூமி அதிர்வுகள் மற்றும் சுனாமி என்பவை தேவனுடைய நேரடி நியாயத்தீர்ப்பாக உள்ளது என்று மற்றைய தத்துவக்கோட்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

ஜப்பானிலும் (2011இல்) நியூசிலாந்திலும் (2016இல்) நிகழ்ந்த பூமி அனர்த்தம் மற்றும் சுனாமியின்போது வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த மக்கள் இதைப் பரிந்துரைத்தார்கள். இது ஒரு பக்குவமற்ற மாறுத்தரமாக அதிக தேவையற்ற வேதனையை உணடாக்குவதாகும்.

அனைத்து இறைக்கோட்பாட்டின் அடிப்படை நம்பிக்கைகளுள் ஒன்றான, இப்போது துன்பப்படுபவர்கள் அவரவருடைய முன்னைய வாழ்வின் பாவத்தின் காரணமாக துன்பப்படுகிறார்கள் என்றும், இந்தத் துன்பமானது அவர்களுடைய முன்வினைப் பயனை சரி செய்ய இந்த வாழ்வில் உதவுகின்றது என்பதானது இக்கண்ணோட்டத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது.[10] ஆகவே, நிகழும் காரணங்களுக்கான தொடர் மற்றும் அதன் தாக்கமானது உடைக்க முடியாததொன்றாக அமைவதோடு. அவர்களது வேதனையை குறைப்பதற்கான முயற்சியெடுப்பதானது எந்தவொரு கட்டத்திலும் அர்த்தமற்றது. அப்படி செய்யின் அது அவர்களுடைய பரிசுத்தமாக்கப்படும் செயன்முறையை தாமதப்படுத்துவதாகவே அமைகிறது. கொரோனோ வைரஸ் அல்லது வேறு நோய்களினால் துன்பப்படும் மக்களுக்கு இந்த உலகக்கண்ணோட்டமானது எந்தவொரு நம்பிக்கையையும் கொடுக்காததை காண்கையில் கடினமாகவே உள்ளது. இந்த விடயத்தை இன்னும் சிக்கலாக்க வேண்டுமெனில், சில கீழைத்தேச தத்துவவியலாளர்கள் துன்பத்தினை வெறுமனே ஒரு மாயையாகவே பார்க்கிறார்கள்.

வேதாகமத்தின் அடிப்படையில், யாராவது ஒருவர்

கடும் நோயினாலோ அல்லது விபத்தினாலோ துன்பப்படின், அவன் அல்லது அவள் தீவிரமான பாவங்களை இரகசியமாக செய்துள்ளாரென்று முடிவு செய்ய வேண்டும் என்று கூறப்படவில்லை. பிரசித்தமான சிந்தனைகளான இதுவே வேதாகமத்தின் நிலைப்பாடு என்று கற்பனை செய்துள்ளது. ஆனால், பழைய ஏற்பாட்டில் யோபுவின் புத்தகமானது இந்த எண்ணக்கருவினை முழுமையாக எதிர்க்கின்றது. தன்னுடைய துன்பத்திற்கு யோபுவே காரணம் என்று கூறும் யோபுவின் நண்பர்கள் தவறாகப் பேசுகிறார்கள் என்று தேவன் தாமே சுட்டிக்காண்பிக்கிறார்.[11]

மேலும், யோபுவின் வேதனையும் துன்பமும், இயற்கை மற்றும் தார்மீக தீமையின் கலவையினால் உண்டாக்கப்பட்டவை. யோபுவின் குடும்பம் மீதான தாக்குதலில் இருந்து சபேயர் மற்றும் கல்தேயரினால் நிகழ்ந்த மரணத்துக்கேதுவான தாக்குதல்கள் (தார்மீக தீமை) மற்றும் அக்கினி மற்றும் காற்றினால் ஏற்பட்ட இரு இயற்கையான பேரழிவு (இயற்கை தீமை). (வேதனையை ஏற்படுத்தும் மூலமான ஒழுக்கமற்றது என்று இங்கே பயன்படுத்தும் “தீமை” என்ற வார்த்தை அர்த்தப்படுத்துவது இல்லை என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அக்கினியானது தன்னில் நன்னடத்தையுள்ளது அல்ல. ஆனால், அது உண்டாக்கும் சேதமானது, அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கெட்டது அல்லது தீமை என்று வர்ணிக்கப்படுகிறது.)[12]

துன்பமானது தனிப்பட்ட பாவங்களுடன் நிச்சயமாக தொடர்புற்று உள்ளது என்பதை இயேசு வெளிப்படையாகவே நிராகரித்தார்.[13] மீண்டும், யோபுவில், அதன் சந்தர்ப்ப

சூழ்நிலையானது, இயற்கை மற்றும் தார்மீகத் தீமை ஆகிய இரு தலைப்பிற்கும் நேரடித் தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய வரலாற்றாசிரியரான லூக்கா, ("லூக்கா சுவிசேஷம்" அல்லது எளிமையாக "லூக்கா" என்று நாம் வழமையாக அழைப்போம்) நிகழ்வுகளை கூறுகிறார்:

*"பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான். அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களா? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கேட்டுப்போவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களா? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்." (லூக்கா 13: 1-5)*

அரசினால் ஏற்படுத்தப்பட்ட கொடுமையில் துன்பப்பட்ட (தார்மீகத் தீமை) மக்கள் தொடர்பில் தனது கவனத்தை இயேசு கொண்டிருந்ததுடன், இயற்கை அனர்த்தத்தினால் (இயற்கையான தீமை) இறந்து போனவர்களையும்

நினைவுகூர்ந்து, இரு நிகழ்வுகளின் அடிப்படையிலும், இந்த அசாதாரணமான விடயங்களினால் விசேடமாக பாதிக்கப்பட்டவர்கள் மூர்க்கத்தனமான பாவிகள் என்றபடியினாலே தேவன் அவர்களைக் குறிப்பாகத் தண்டிக்கிறார் என்பதாக, பிரசித்தமாக இருந்த கருத்தை இயேசு வன்மையாகக் கண்டித்தார். இவ்வாறான நிகழ்வுகள் நிகழக்கூடிய மற்றும் நிகழுகின்ற உலகிலேயே நாம் வாழுகின்றபோதிலும், தேவன் அனைத்தையும் ஆள்பவராக இருக்கும்போதிலும், இது எப்போதும் தேவனால் நேரடியாக உண்டாக்கப்படுவது இல்லை.

அந்த நிகழ்வின்போதான இயேசுவின் இறுதியான கருத்தினைப் பார்க்கையில் இந்தப் பிரச்சனை தொடர்பில் இன்னும் அதிகமான காரியங்கள் உள்ளன என்பதைக் காண்பிக்கிறது. மற்றவர்களுக்கு ஏற்பட்ட ஆபத்தில் இருந்து ஒருவர் காப்பாற்றப்பட்டால், காப்பற்றப்பட்டவர் அப்பாவி என்று அர்த்தம் அல்ல: ”நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.” (மனந்திரும்புதல் தொடர்பில் நாம் பின்பு ஆராய்வோம்).

அனைத்து பேரழிவுகளும் நோய்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இல்லாமல் இருந்தபோதிலும் (யோபுவின் கதையைப்போல) சில அவ்வாறாகவே இருக்கின்றது என்பது கிறிஸ்தவ போதனையில் தெளிவான பகுதியாக அமைகின்றது. கொரிந்திய திருச்சபையின் சில எண்ணிக்கையிலானவர்கள் நோய்வாய்ப்பட்டு இருப்பது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் விளைவாக நிகழ்ந்தது என்று ஆரம்ப கிறிஸ்தவ தலைவனான பவுல் கொரிந்திய

திருச்சபைக்குக் கூறுகின்றார்: அவர்களுடைய ஒழுக்கமற்ற வாழ்க்கை முறையில் இருந்து மனம் மாற வேண்டுமென்று தேவன் விருப்பப்பட்டார்.[14] ஆனால், தேவனுடைய ஆவியானவரினால் ஏவப்பட்ட ஒருவராக விசேஷித்த உள்ளுணர்வைக் கொண்டவராகவே பவுல் இதை எழுதினார். இயற்கையான தீமையினால் உருவாக்கப்பட்ட வேதனையை தேவனிடமிருந்தான தண்டனை என்று வியாக்கியானம் செய்பவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அதேபோல, இந்த நோய்ப்பரம்பல் குறித்துக் கூற தேவனிடம் எதுவும் இல்லை என்று கூறுபவர்களைக் குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள். குறிப்பாக, கலாச்சார ரீதியில் தொடர்பற்றது என்று தேவனிடமிருந்து பாரியளவில் விலகிய மேலைத்தேய நாடுகள் தொடர்பில் எச்சரிக்கையாய் இருங்கள்.

## ஏன் நாத்திகம் உங்களுக்கு உதவி செய்வதில்லை?

சில நாத்திகர்கள் சிலவகையான “நியாயத்தீர்ப்பு” அல்லது “விதி” தொடர்பில் நம்புவதை அவதானிக்கலாம். இதுவே, “அவர்களே இதை வரவழைத்தார்கள்” என்ற கூற்றின் அடிப்படையாக அமைகிறது.

நாத்திகத்தைக் குறிப்பிடுகையில், இந்தப் பேரழிவு மற்றும் இயற்கையான தீமையின் பிரச்சனைகளுக்கான ஒரே தீர்வு, தேவனை விட்டுவிட்டு, நாத்திகத்தைத் தழுவிக்கொள்வதேயென்று சிந்திக்கும் அநேக மக்கள், கொரோனோ வைரஸ், புற்றுநோய், சுனாமி மற்றும் பூமி அனர்த்தம் என்பன தேவன் இல்லை என்பதையே

காண்பிக்கின்றது என்று கூறுகிறார்கள். அதாவது, கடினமானதும் உணர்வற்றதும் மற்றும் நாம் வாழ்கின்றோமா அல்லது மரணிக்கிறோமா என்பது தொடர்பில் கவலைப்படாத அகிலம் உள்ளது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

என்னைப்போன்ற கிறிஸ்தவர்கள் போராட வேண்டிய பிரச்சனைகளை ஸ்கொட்லாந்தின் அறிவொளி தத்துவவியலாளர் டேவிட் ஹியூம் சுட்டிக் காண்பிக்கிறார். கி.மு 3ஆம் நூற்றாண்டின் கிரேக்க தத்துவவியலாளர், பரவலாக மேற்கோள் காண்பிக்கப்படும் பின்வரும் கூற்றினைக் குறிப்பிட்டார் :

*"எப்பிகூரின் பழைய கேள்விகளுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. தேவன் தீமையை தடுக்க முற்படுகிறபோதிலும் அவரால் இயலாமல் இருக்கிறதா? அப்படியெனில் அவர் செயலிழந்தவராக இருக்கிறாரா? அவரால் முடியுமாக இருந்தபோதிலும், அதை செய்ய விரும்பாதவராக இருக்கிறாரா? அப்படியெனில் அவர் தீய எண்ணம் உடையவராக உள்ளாரா? அவர் வல்லமையுடையவராகவும் விருப்பமுடையவராகவும் உள்ளாரா? அப்போது தீமை எங்கிருந்து வருகிறது?"*[15]

ஆனால் இந்த நாத்திகப் பாதை எங்கே நிறைவடைகின்றது? வேதனை யதார்த்தம் தொடர்பிலான ரிச்சர்ட் டோகின்ஸ்சின் நாத்திக சித்தாந்தத்தின் மாறுத்தரமானது இதனுடன் நன்கு ஒருங்கிணைகின்றது:

*“இயற்கையான உலகிலே ஒரு ஆண்டிற்கான வேதனையின் மொத்த அளவானது அனைத்து ஒழுக்கமான ஆழ்ந்த சிந்தைக்கும் அப்பால் உள்ளது. இந்த வசனத்தை உருவாக்க எனக்கு எடுந்த இந்த நிமிடத்திலே, ஆயிரக்கணக்கான விலங்குகள் உயிருடன் உண்ணப்படுகின்றன, இன்னும் அநேகர் தம்முடைய வாழ்க்கைக்காக ஓடுகிறார்கள், பயத்தினால் முனகுகிறார்கள், மற்றவர்கள் ஒட்டுண்ணிகளினால் மெதுவாக விழுங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள், பட்டினி, தாகம் மற்றும் நோயினால் ஆயிரக்கணக்கான அனைத்துவகை உயிரினமும் இறந்து போகின்றன. இது இவ்வாறாகவே இருக்க வேண்டும். தாராளமாக உள்ள ஒரு காலம் எப்போதாவது உருவாகின், இந்த சூழ்நிலையினால், இயற்கையாகவே பட்டினி மற்றும் துன்பம் மீண்டும் வரும் வகையில் சனத்தொகையானது இயற்கையாகவே அதிகரிக்கும். இலத்திரன்கள், மற்றும் சுயநல மரபணுக்கள், கண்ணுக்குத் தெரியாத பௌதீக விசைகள் மற்றும் மரபணு பிரதி செய்கையினால், சில மக்கள் காயப்படப் போகிறதுடன், சிலர் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொள்ளப் போகிறார்கள். இதில் எந்தவொரு தொடர்பையோ அல்லது காரணத்தையோ அல்லது நீதியையோ காண முடியாது. நாம் அவதானிக்கும் இந்த அண்டமானது, பண்புகளைக் கொண்டிருப்பின், அதன் ஆழத்தில், வடிவம், நோக்கம், தீமை, நன்மை என்பவை இல்லாத ஆனால் ஒன்றும் புலப்படாத, இரக்கமற்ற அலட்சியத்தையே எதிர்பார்க்க முடியுமாக உள்ளது.* DNA *அறிவதோ அல்லது கவலையடைவதோ இல்லை.* DNA *வெறுமனே அதுவாகவே உள்ளது. நாம் அதன் இசைக்கு நடனமாடுகிறோம்.”* [16]

கிறிஸ்தவன் எவ்வாறு இது தொடர்பில் மாறுத்தரத்தைக் காண்பிக்க வேண்டும்? நாத்திகம் தொடர்பிலான டோகின்ஸ னின் நிர்ணயிக்கப்பட்ட கருத்துப்பாங்கானது, நன்மை தீமை என்ற வகைகளை நீக்கிவிட்டு, குருட்டுத்தனமான இரக்கமற்ற அலட்சியத்தையே இந்த சாவுக்குரிய அண்டத்தில் பதிலீடு செய்கிறது. எவ்வாறாயினும், நன்மை தீமையை புறக்கணித்தலானது, கொரோனா வைரஸ் கெட்டது அல்லது தீமையானது என்ற எந்தவொரு சம்பாஷணையையும் அர்த்தமற்றதாக்குகிறது (டோகின்ஸ் இதை உண்மையிலே நம்புகிறார் என்பதை கற்பனை செய்ய முடியாமல் இருக்கின்றது).

இருப்பினும், டோகின்ஸ் ஒரு முக்கியமான குறிப்பை முன்வைக்கிறார். கொரோனோ வைரஸ் தொடர்பில் நாத்திக நம்பிக்கையானது நியாயமான மாறுத்தரமாக இருக்குமா என நாம் வினவ வேண்டும். தேவன் இல்லை எனில், நாம் அனைவரும் கொண்டிருக்கும் நன்மை மற்றும் தீமை என்கிற எண்ணக்கரு முதலில் எங்கேயிருந்து வந்தது? ஏனெனில், கொரோனோ வைரஸ் ஏற்படுத்தும் மரணங்கள் மற்றும் அதன் அழுத்தங்கள் உள்ளடங்கலாக அதன் விளைவுகள் என்பன அணுக்களின் சாதாரண மீளமைவினால் ஏற்படும் தாக்கங்களை “தீயது” என்று எந்தவொரு ரீதியிலும் நாம் கூற முடியாதவர்களாகி விடுகிறோம்.

“தேவன் இல்லை எனில், அனைத்து விடயங்களும் ஏற்கத்தக்கவையாக அமைகிறது”[17] என்று பியோடோர் டாஸ்டோவ்ஸ்கி எழுதுகிறார். தவறான புரிதலை தவிர்ப்பதற்காக, நாத்திகர்கள், தார்மீக ரீதியில் செயற்பட

முடியாது என்று அர்த்தப்பட டாஸ்டோவ்ஸ்கி கூறவில்லை என்பதனை பதிவிட வேண்டியுள்ளது. உண்மையில் கூறப்போனால், நாத்திகர்கள் தமது தார்மீக நடத்தையினால், சமய ஈடுபாடுடைய மக்களை வெட்கத்திற்குள்ளாக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இது தொடர்பிலான கிறிஸ்தவர்களின் கண்ணோட்டம் யாதெனில், ஆணோ பெண்ணோ, தேவனை நம்புகிறார்களோ அல்லது இல்லையோ, அவர்கள் அனைவரும் படைத்தவரான தேவனின் சாயலில் உருவாக்கப்பட்ட தார்மீக உயிர்களாக இருக்கிறார்கள், ஆகவே அனைத்து மனிதர்களாலும் தார்மீக ரீதியில் செயற்பட முடியும். நாத்திகர்கள் தார்மீக நம்பிக்கையில் குறைபாடுள்ளவர்கள் என்று டாஸ்டோவ்ஸ்கி அவர்களை குற்றப்படுத்தவில்லை. மாறாக, ஆழமான ஒன்றை அவர் பரிந்துரைக்கிறார். அதாவது தேவன் இல்லையெனில், நன்மை மற்றும் தீமை பற்றிய எண்ணக்கருக்கான எந்தவொரு பகுத்தறிவிலான உத்தரவாதம் இல்லை என்கிறார். ரிச்சட் டோகின்ஸின் கூற்று இதனை முழுமையாக ஆதரிக்கிறது.

இருப்பினும், இயற்கை மற்றும் தார்மீகத்தீமை எமது முதன்மை தலைப்பாக இல்லாமலிருக்கும் போதிலும், டோன்கின்ஸின் கண்ணோட்டத்தில், கம்போடியா மற்றும் ருவண்டாவின் கொலைக்களத்தின் சூத்திரதாரிகள் மற்றும் தீவிரவாதிகள் என்போர், உள்ளமைந்த மரபணு திட்டத்தையே கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இதைப்போலவே மனிதனுக்கு எதிராக பயங்கரமான குற்றங்களை செய்த ஸ்டாலின், ஹிட்லர் மற்றும் மாவோ என்பவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் கவனித்தல் முக்கியமானதாகும். சிறுவர்களை வேடிக்கையாக

கொலை செய்யும்படி நீங்கள் உணர்வீர்களானால், அப்படியெனில் (இந்த கண்ணோட்டத்தில்) அது உங்கள் DNAக்கு நீங்கள் ஆடுகின்ற ஒன்றாக அல்லவோ அமையும். அப்படியெனில், சில மக்கள் தவறுதலாக வழிநடத்தப்பட்டு தீமை என்றழைக்கும் விடயங்களைக் குறித்து எம்மில் ஒருவராலும் ஒன்றும் செய்ய இயலாது. நானும் அவர்களும் எந்தப் புகாருமின்றி அதற்கு விட்டு விட வேண்டியதாக அமைகிறது. இங்கு தார்மீகம் என்பது அர்த்தமற்றதாகி விடுகிறது.

இந்தக் கண்ணோட்டமானது, நிகழக்கூடியதொன்று அல்ல. ரிச்சர்ட் டோகின்ஸ் இதற்கு சாட்சியாக இருக்கிறார். அவருடைய விவாதங்கள், நன்மை மற்றும் தீமையின் யதார்த்தத்தை வலிமையற்றதாக்குகிற போதிலும், பின்பு ஏன் அவர் 9/11 மற்றும் மற்றைய தீச்செயல்களை தீமையாகக் காண்பிக்கிறார்? [18]

இயற்கையான அல்லது தார்மீகத் தீமைக்கு எதிராக எழும் நியாயமான சீற்றமானது “நன்மை” என்பதற்கான ஒரு தரத்தை முன்வைக்கிறது. அது புறநிலை ரீதியில் உண்மையாக இருப்பதுடன், அது எம்மில் சார்ந்திராததினால், நாம் ஒரு விடயத்தைக் கண்டிக்கும்போது, மற்றவர்களும் அதனுடன் இணங்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இந்தத் தரமானது “எல்லை கடந்த நிலையாக” உள்ளது. அதாவது, ஒரு தனிநபரின் எண்ணக்கரு நிலையைக் கடந்து காணப்படுகிறது. உதாரணமாக, எமது உலகக்கண்ணோட்டம் எதுவாக இருப்பினும், கொரோனோ வைரஸானது தீயது என்று எந்தத் தயக்கமும் இன்றி கூறக்கூடியதாக இருக்கும்.

தேவன் இல்லாதிருந்து, அதனால் எந்தவொரு எல்லை கடந்த பெறுமதிகளும் இல்லாது இருப்பின், பின்பு எவ்வாறு நன்மைக்கான நோக்கத்திற்குரிய தரங்கள் இருக்கக்கூடும்? எந்தவொரு விடயத்திலும், நன்மையோ அல்லது தீமை இல்லை எனில், தார்மீகத்தின் எண்ணக்கருக்கள் மறைந்து போய்விடுவதோடு, தார்மீக கொடுஞ்செயலானது, அபத்தமானதாக அமைகிறது. தார்மீகம் அல்லது இயற்கையான தீமையின் "பிரச்சனைகள்" என்று அழைக்கப்படுபவை, அக்கறையற்ற விடயங்களான குருட்டுத்தனமான அலட்சியத்தினுள் கலப்பனவாக அமைகிறது.

தத்துவவியலாளரான ரிச்சர்ட் டெய்லர் இவ்வாறு உடன்படுகிறார்:

*"தேவனால் கொடுக்கப்பட்ட சட்டம் தொடர்பிலான எண்ணக்கருவினை நிராகரிக்கும், நவீன காலமானது, எப்போதும் தார்மீக ரீதியில் சரி மற்றும் பிழை என்ற எண்ணக்கருவினை தக்கவைக்க முயற்சி செய்யவில்லை. தேவனை புறம்பே தள்ளிவிட்டு தார்மீக சரி மற்றும் தவறின் அர்த்தங்களுக்கான நிலையை அவர்களை அறியாமலேயே தகர்கிறார்கள். கல்வியறிவு உள்ளவர்களுக்கு இது கூறப்பட வேண்டியதாக இல்லாதிருப்பினும், இவ்வாறான கேள்விகளுக்கான பதில்களானது சமயத்திற்கு வெளியே கிடைக்கப்பெறுவது இல்லை."* [19]

மேற்கத்திய கலாச்சாரத்தின் மையமாக இருந்த வேதாகம தார்மீகத்தை விட்டுவிட்டதன் விளைவுகளை

மற்றவர்களைப் பார்க்கிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தத்துவவியலாளரான பிரைட்ரிச் நீட்சே தெளிவாகக் கண்டார். தேவனை மறத்தலானது, டார்வினின் “வல்லமைக்கான விருப்பத்தை” வெளிப்படுத்தலுக்கு வழிநடத்திச் செல்லும் என்று அவர் கணித்தார். அதாவது, பலமிக்கது, பலவீனமானதை அழிக்க விரும்புவதோடு அழித்தும் விடுகிறது. அவர் இவ்வாறு எழுதுகிறார்:

*“கொலை செய்யாதிருப்பாயாக என்ற வேதாகமத்தில் உள்ள தடையானது நீதியான (ஞானமான) ஒன்றாகும்..... ஒரு உயிரினத்தின் ஆரோக்கியமான மற்றும் சீரகுலைந்த பகுதிக்கு இடையில் எந்தவொரு ஒற்றுமையையும், எந்தவொரு ‘சம உரிமையையும்’ வாழ்வானது இனங்காண்பது இல்லை: ஒன்று பின்னானதை ஆட்கொள்ளும் அல்லது மொத்தமும் அழியும்.”* [20]

கிறிஸ்தவத் தார்மீகத்தை அடிமைகளினுடையதாக நீட்சே இழிவாகக் கருதுகின்றதுடன், தேவனுடைய மரணம் என்பது தயவு, மனதுருக்கம் மற்றும் மன்னிப்பின் மரணத்தை அர்த்தப்படுத்துகிறது என்று சுட்டிக்காட்டுகிறார்:

*“ஒருவன் கிறிஸ்தவ நம்பிக்கையை விட்டுவிட்டானாகில், அவன், கிறிஸ்தவ தார்மீகத்திற்கான உரிமையை இழந்து போகின்றான்.....கிறிஸ்தவ தார்மீகமானது கட்டளையாக இருக்கிறது: அதன் ஆரம்பமானது எல்லை கடந்ததாகும்...தேவன் உண்மையானவராக இருப்பின் மாத்திரமே அது உண்மையைக் கொண்டிருக்கிறது. தேவன் மீது உள்ள விசுவாசத்தின் அடிப்படையில் அது நிலை நிற்கும் அல்லது வீழ்ந்து போகும்.”* [21]

இன்னுமொரு நூலில் நீட்சே இவ்வாறாகக் கேட்கிறார், “வாழ்வு, இயற்கை மற்றும் வரலாறு ‘தார்மீகம் அற்றதாக” இருக்கையில்’ *ஏன் தார்மீகம் அவசியம்?*”[22] ஒவ்வொரு நாத்திகனும் போராட வேண்டிய கேள்வி இதுவாகவே இருக்கிறது.

## கிறிஸ்தவத்திற்கான பிரச்சனை

தார்மீகம் (அறநெறி) உள்ளது என்பதுதான் உண்மை. நேரடி அனுபவங்களினூடாக தார்மீக உயிரிகளாக இருக்க வேண்டுமென்று நாமறிவோம். ஒக்ஸ்வேர்டின் முக்கிய நெறிமுறையாளரான ஜே.எல் மக்கி இவ்வாறு எழுதுகிறார்.

> *“சாதாரண நிகழ்வுகளில் இருந்து பெரும்பாலும் உதித்திருக்க முடியாத வழக்கமில்லாத பண்புகள் மற்றும் தொடர்புகளின் தொகுப்புகளைக் (நெறிமுறைகள்) கொண்டிருப்பதினால், இது வல்லமையுள்ள தேவனின்றி உருவாக்கப்பட்டிருக்க முடியாது. அப்படியெனில், அவ்வாறான உள்ளார்ந்த விதிமுறைக்கட்டுப்பாட்டுக்குரிய நோக்கத்திற்குரிய பெறுமதிகள் இருப்பின், அவை தேவனுடைய இருப்பை இன்னும் சாத்தியமாக்குகின்றன. தேவன் இருக்கிறார் என்பதை ஆதரிக்கும் விவாதத்தை தார்மீகத்தில் இருந்து நாம் பெற வேண்டியதாக இருக்கிறது.”* [23]

இவ்வாறான தார்மீக தரங்களின் இருப்பை மறுதலித்த நாத்திகனாக மக்கி இருந்தார். இருப்பினும், குழந்தைகளை கொடுமைப்படுத்துவது போன்ற விடயங்கள் முழுக்க

முழுக்க தவறானவை என்று எம்மால் நிச்சயமாகக் கூற முடியும். இவ்வாறு கூறுவோமானால் நாத்திகத்தைத் தழுவுவதையும் அதன் தர்க்கரீதியான வாதத்தை பின்பற்ற விரும்புதலையும் கைவிட்டு விடல் வேண்டும்.

வேதனை மற்றும் துன்பத்திலிருந்து தேவனை அகற்றும் சமன்பாட்டினால் அவை நீங்கப்போவது இல்லை. இது அவற்றை தொடாதவைகளாக விட்டு விடுகிறது. ஆனால் தேவனை அகற்றுவது, எந்தவொரு வகையான இறுதியான நம்பிக்கையை அகற்றி விடுகிறது. இது, நாம் பின்பு பார்க்க இருக்கும் ஒரு பிரச்சனையாகும்.

டேவிட் ஹியூம் திறம்பட முன்வைத்த கேள்வியுடன் நாம் இன்னும் போராடவில்லை. அன்பின் தேவனின் இருப்புடன், கொரோனோ வைரஸானது சமரசமாக்கப்படுமா?

# 4. அன்பின் தேவன் இருக்கையிலே கொரோனோ வைரஸ் எவ்வாறு காணப்படக்கூடும்?

இந்தக் கேள்வியை கையாளும் வகையில் (அடுத்த இரு அத்தியாயங்கள்) முதலில் மூன்று விடயங்கள் தொடர்பில் நாம் சிந்திக்கப் போகிறோம்: முதலில், பொதுவான வைரஸின் இயல்பு. இரண்டாவதாக, மனித இயல்பு. மூன்றாவதாக, ஏன் காரியங்கள் இருக்கிற விதமாக இருக்கின்றன என்பது குறித்து வேதம் என்ன கூறுகிறது என்பனவாகும்.

## வைரஸ்களின் இயல்பு

வைரஸைப் பற்றி சிந்திப்பதற்கு உதவி செய்யும் வகையில், அவுஸ்திரேலிய ரிவேர்ஸ் நிறுவனம், க்ரிபித் பல்கலைக்கழகத்தின் துணை பேராசிரியரான பீட்டர் போலார்டினால் உலகப் பொருளாதார மன்றத்தில் எழுதப்பட்ட அறிவுறுத்தும் கட்டுரையின் பகுதியானது இங்கு முன்வைக்கப்படுகிறது. போலார்ட் இவ்வாறு கூறுகிறார்:

*“அநேகமான மக்களுடைய இருதயத்தில் “வைரஸ்” என்ற வார்த்தையானது, திகிலையே தோற்றுவிக்கின்றது.*

*இது இன்ப்லுவென்சா, எச்ஐவி, மஞ்சள் காய்ச்சல் அல்லது இபோலா என்பவற்றின் படமே எழுகிறது. இந்த வைரஸ்கள் குறித்து நாம் நிச்சயமாக பயமடைகிறோம். இவை நோயையும் சில நேரங்களில், துன்பகரமான வேதனையுடைய மரணத்தையும் கொண்டு வருகிறது.*

*“ஆனால், மனித உடலுக்கு தீங்கை விளைவிக்கும் 21 வைரஸ் வகைகளை, உலகில் இருக்கும் 100 மில்லியன் வைரஸ் வகைகளுடன் ஒப்புடுகையில் முக்கியமற்ற பங்காகவே இருக்கிறது. நாம் உயிர்வாழ்வதற்கு அநேகமான வைரஸ்கள் உண்மையிலேயே அவசியமாகின்றது.....*

*“இந்த ‘நல்ல’ வைரஸின் இந்த எண்ணிக்கையை வியக்க வைக்கிறது. உயிர் வாழ்க்கைக்கு ஏற்ற ஒரு குளம் அல்லது ஆற்றில் உள்ள செறிவு பெரும்பாலும் மில்லிலிட்டருக்கு 100 மில்லியனாக அமைகிறது. இதன் தொகையானது அவுஸ்திரேலியாவின், சனத்தொகையில் நான்கு மடங்கிற்கும் அதிகமானது. அது ¼ தேக்கரண்டியில் பிழியப்பட்ட நீரிலும் அதிகமாக அமைகிறது. வைரஸ்கள் உயிர்வாழும் உயிரினங்களல்ல. அவை ஒட்டுண்ணிகளைப் போன்று செயற்படுகின்ற, வெறுமனே புரதத்தினால் சுற்றப்பட்ட மரபணுப் பொருட்களின் உயிரிகளாக (DNA அல்லது RNA) அமைகின்றது. அவை, இலக்கு உயிரணுக்களுடன் (கலம்) இணைந்து அவற்றினுள் தமது வேதியல் பொருட்களை உட்செலுத்தி, நுண்ணுயிர் கலத்தின் வளர்ச்சிதை மாற்றத்தின்*

*பாதைகளைப் பயன்படுத்தி தம்மை பிரதிசெய்து கொள்கின்றன. பின்னர் புதிய வைரஸ்கள் அக்கலத்திலிருந்து வெளியேறுகின்றன – கலமானது வெடித்து, நூற்றுக்கணக்கான வைரஸ்களை வெளியேறுகின்றன.*

*“உயர் பக்டீரிய வளர்ச்சி மற்றும் வைரஸ் தொற்று என்பவற்றின் கலவையே சுற்றுசூழலை தொழிற்படச் செய்து கொண்டு இருக்கிறது...வைரஸ்கள், உயிர்ப்பொருள் சார்பற்ற ஊட்டச்சத்து வட்டத்தின் முக்கியமான பகுதியாக அமைகிறது. சிறியதாகவும் முக்கியமற்றவைகளாகவும் தென்படும் வைரஸ்கள், உணவு வலையின் ஊடாக, ஊட்டச்சத்து சுழற்ச்சியில், உலகளாவிய ரீதியில் அத்தியாவசியமான பங்கை வகிக்கிறது. நமது வாழ்விற்கான அவற்றினுடைய நேர்மறையான தாக்கத்தின் அளவினை இப்பொழுதுதான் நாம் பாராட்ட ஆரம்பிக்கிறோம்.*

*“ஒன்று மாத்திரம் நிச்சயம், வைரஸ்கள், என்பது புகழப்படாத எமது சிறிய நாயகர்கள்.”* [24]

இவ்வாறாக, “வைரஸானது இன்னும் சிறப்பான மரியாதைக்குரியது” என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையில் பென்சில்வீனியா மாநிலப் பல்கலைக்கழகத்தின் வைரஸ் சூழலியலாளரான மேரிலின் ஷரூசிங் என்பவர் வைரஸ்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை என்றும் அவற்றுள் அதிகபட்சமாக 1%மானவையே நோய்க்கிருமியாக இருக்கிறது – அதாவது தங்கள் கலங்களுக்கு தீங்கை விளைவிப்பனவாக இருக்கிறது என்று கூறுகிறார்.

ஆகவே வைரஸில் பெரும்பான்மையானது அனுகூலமானவையாக இருக்கிறதோடு, சிறிய அளவிலான கோவிட்-19 போன்ற வைரஸ்களே மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றன. சளி, இன்ப்லுவென்சா, நிமோனியா மற்றும் ஏனைய சுவாசத்தொகுதி நோய்களுக்கு பொறுப்பாக அமைகின்ற கோரோனோ வைரஸ் குடும்பத்தில் ஒன்றே கோவிட்-19 ஆகும்.

இது பூமி அதிர்ச்சியின் நிலைக்கு ஒத்த சூழ்நிலையாகவே அமைகிறது. வாஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியலாளரான பீட்டர் வர்ட் மற்றும் வானியலாளரான டொனல்ட் பிரௌன்லீ அவர்களுடைய *“ரெயார் ஏர்த்”* (Rare earth) என்ற புத்தகத்தில் “புவியியல் தட்டின் அதிசயிக்கத்தக்க முக்கியத்துவம்” என்று தலைப்பிடப்பட்ட அத்தியாயம் காணப்படுகிறது.[25] அதில் உள்ள விவாதமானது, உலகின் புவியியல் தட்டுகள் நகராது போனால், உலகில் நிகழும் பாரிய அழிவுகள் தொடர்ந்துகொண்டே போகும். இதற்கான பல காரணங்கள் உண்டு. கண்டங்களின் உருவாக்கத்திற்கும், பூமி (மலைகள்) மற்றும் கடலுக்கு இடையிலான சமநிலையைப் பேணுவதற்கும் புவியியல் தட்டுகள் அவசியமானவையாகும். சீராக சமநிலைப்படுத்தப்பட்ட காபன் டயொக்சைட் அளவினை பேணுவதற்கு இரசாயங்கங்களை மீள்சுழற்சி செய்வதன் மூலம் உலகளாவிய வெப்பநிலை பேணியாக செயலாற்றுகிறது.

மேலதிகமாக, உயிர்களுக்கு ஆபத்தை வருவிக்கும் அண்டக் கதிர்களில் இருந்து பாதுகாக்கும், பூமியின்

மின்காந்தப்புலத்தை புவியியல் தட்டுக்கள் பேணுகின்றது என்று வார்ட் மற்றுன் பிரௌன்லீ விவாதிக்கிறார்கள். "பூமியின் உயிர்வாழ்விற்கான மையத்தேவைப்பாடாகவும், உலகத்திற்கு நீரை வழங்கிக் கொண்டிருப்பதை பேணுவதற்கு அத்தியாவசியமானதாக புவியியல் தட்டுக்கள் காணப்படுகின்றன" என்பதே அவர்களுடைய முடிவுரையாகும்.

ஆகவே, வைரஸ்கள், பூமி அனர்த்தங்கள் ஆகிய இரண்டும், வாழ்விற்கு அத்தியாவசியமானவையாகத் தோன்றுகிறது. படைத்தவரான தேவன் இருக்கிறார் எனில், வரைவிலக்கணத்தின்படி, இறுதியாக அவற்றின் இருப்பிற்கு அவரே பொறுப்பாளியாக இருக்கிறார்.

இருப்பினும் அவை ஏன் இருக்க வேண்டும்? கொரோனோ வைரஸ் நோய்ப்பரவலானது வெறுமனே உயிரியாக இருக்கிறது என்பதினால் உயிரியல் செய்ய வேண்டியதையே அது செய்கிறது என்று சிலர் கூறுவதைப்போல கூறுவது நிச்சயமாக போதாதாகவே அமைகிறது. இதை விட அதிகமான ஒன்று நிச்சயமாகக் காணப்படல் வேண்டும்.

எமக்குக் கொடுக்கப்பட்ட விஞ்ஞானமானது அநேகமான வைரஸ்கள் நன்மை பயப்பன என்றும், சில வாழ்விற்கு அத்தியாவசியமானவை என்றும் காண்பிக்கிறது. ஏன் தீங்கு பயக்கும் நோய்க்காரணிகள் காணப்படுகின்றன? வைரஸ் நோய்க்காரணிகன் இன்றிய உலகை தேவன் படைத்து இருப்பாரா என்பதே தத்துவவாதிகளின் முக்கிய கேள்வியாக அமைகிறது.

இது போன்ற ஒரு தொகைக் கேள்விகளுக்கு எம்மை இது அழைத்து வருகின்றது. ஆபத்து அற்ற மின்சாரத்தை அல்லது எரிக்காத நெருப்பினை தேவனால் உருவாக்க முடியாமல் இருந்து இருக்குமா? வேட்டையாடுதல் இன்றிய ஓர்கானிக் உலகினை தேவனால் உருவாக்க முடியாமல் இருந்து இருக்குமா? எப்போதும் தவறாகப் போகாத வாழ்வையும் எப்போதும் அனுகூலத்தை வழங்குகிற வைரஸ்களை உடையவாறு தேவனால் படைத்து இருக்க முடியாதா? பிழையே செய்திடாத உயிர்களை தேவனால் படைத்து இருக்க முடியாதா? (கொரோனோ வைரஸ் வீரியமானதாக இருப்பினும், மற்றைய மக்களைப் போன்று மக்களை அது கொல்லப்போவது இல்லை.)

## மனிதனின் இயல்பு

இந்தக் கேள்விகளில் இறுதியானவை பெரும்பாலாக, மற்றையவைகளுடன் ஒப்பிடுகையில் பதில் கூறக்கூடியதாக உள்ளது. இதற்கான பதில் ஆம் என்றே தெளிவாக உள்ளது. தார்மீக ரீதியில் தவறு செய்யாத விடயங்களையும் தேவன் உருவாக்கியிருக்கிறார். உதாரணத்திற்கு, விலங்குகள் தார்மீக உயிர்கள் அல்ல.

மிருகக்காட்சிசாலையின் காப்பாளரை சிங்கம் கொன்றது என்றால், அதற்காக கொலைக் குற்றச்சாட்டுக்காக அதைக் கொலை செய்யப்போவது இல்லை. அது ஒழுக்கம் மற்றும் ஒழுக்கமின்மை ஆகிய இரண்டும் அற்ற உயிரினமாகும். உட்பதிக்கப்பட்ட நிகழ்வுகளை தானாகவே பின்பற்றும் ரோபோக்களை தேவனால் இலகுவாகப் படைத்து இருக்கக்கூடும். ஆனால்,

அந்த உலகில் மனித உயிர்களான எம்மை உள்ளடக்காததாக அமையும். கூறப்போனால், தீமையற்ற சாத்தியத்தையுடைய ஒரு உலகில் வாழ வேண்டும் என்று விரும்பும் மக்கள் உண்மையிலேயே அவர்கள் இல்லாத ஒரு உலகையே விரும்புகிறார்கள் என்று அர்த்தப்படுகிறது. தேவன் எமக்குக் கொடுத்துள்ள பாரிய பரிசினுள் ஒன்று சுய தெரிவு ஆகும். எம்மால் ஆம் அல்லது இல்லை என்பதைக் கூற முடியும். அந்தத் திறனானது, அன்பு, நம்பிக்கை, மற்றும் தேவன் மற்றும் ஒருவருக்கொருவர் இருக்கும் நேர்மையான உறவு போன்ற அற்புதமான விடயங்களை ஆரம்பித்து வைக்கிறது. எவ்வாறாயினும், இந்த அற்புதமான மற்றும் நல்ல திறன்களே எம்மை தீமை செய்ய இயலுமாக்குகிறது. அப்படி என்றாலும் கூட அது தீமை செய்யும் அனுமதியை எமக்குக் கொடுக்கிறது இல்லை.

தேவன் தீவிரமாக செய்யும் விடயங்களான தேவனுடைய அனுமதியளிக்கும் சித்தம் - அதாவது தீமை நிகழ சாத்தியமான அண்டத்தை தேவன் படைத்தமை - மற்றும் ஆணையின் (உத்தரவு) சித்தம் என்பவற்றுக்கு இடையில் இறையியலாளர்கள் வேறுபடுத்திக் கொண்டதின் நிமித்தமாக இது மிகவும் முக்கியமானதொரு குறிப்பாக அமைகிறது. தேவனானவர், தீமையின் எழுத்தாளர் அல்ல என்று புதிய ஏற்பாடு தெளிவாகக் கூறுகிறது. ஆகவே இது அவர் உருவாக்கிய உலகத்திலும் சாத்தியமாகும். ஆனால் அவர் உருவாக்கிய உலகத்திற்கான அவருடைய நோக்கம் இதுவல்ல.[26]

காரியங்களைத் தவறாக செய்யும்படிக்கு மனித

உயிர்களுக்கு ஒரு குறித்த அளவிலான சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. ரிச்சர்ட் டோகின்ஸ் மற்றும் இறந்து போன விஞ்ஞானி ஸ்டீபன் ஹாவ்கிங் ஆகியோர், நாம் நிர்ணயிக்கப்பட்ட அண்டத்திலேயே வாழுகிறோம் என்பதாக சிந்தித்துள்ளார்கள். ஆனால் அது அவ்வாறானதாக இல்லை.[27] தேவன் மனிதர்களுக்கு தெரிவு செய்யும் சுதந்திரத்தைக் கொடுத்ததுடன் அவர் ஆளுகை செய்கிறார். இது இரண்டையும் வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. இது எவ்வாறு "செயற்படுகிறது" என்பது தொடர்பிலே கிறிஸ்தவர்கள் வித்தியாசப்படுகிறார்கள். ஆனால் அது குறித்து இங்கு கலந்துரையாடப் போவது இல்லை. தேவன் கொரோனோ வைரஸினால் பின்னாகத் திரும்பவில்லை, மாறாக, அதன் தீமையின் மத்தியில் நன்மைக்காக அவரால் செயற்பட முடியும் என்பதுடன் எம்மால் கையாளக் கடினமான இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலைகளின்போதும் அவருடைய திட்டங்கள் முறியடிக்கப்பட மாட்டாது என்பதை அறிந்து கொள்வதே இங்கு எம்முடைய நோக்கமாக இருக்கிறது. அதே சமயத்தில், அவர் எமக்கு சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிற காரணத்தினாலே, இந்த நெருக்கடி மற்றும் மற்ற நபர்கள் தொடர்பிலாக நாம் கொடுக்கும் மாறுத்தரத்திற்கு நாமே பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம்.

காரியங்கள் பிழையாக போகக்கூடிய உலகிலேயே நாம் வாழ்வதோடு, இங்கு தவறை (அல்லது சரியானதை) மனிதர்களால் தெரிவு செய்யவும் முடியும். ஏன் உலகம் இவ்வாறாக உள்ளது? வேதாகமத்தில் உள்ள பதில் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஏன் விடயங்கள் அவை

இருக்கிற பிரகாரமாக இருக்கின்றன?

இவ்வாறாக இதைச் சிந்தித்துப் பாருங்கள். தேவன் தம்முடைய “மிகச் சிறந்த” படைப்பில் மனிதர்கள் வாழும்படி அவர்களை படைத்தபோது, அவர்களை தார்மீக உயிர்களாக மாற்றும் அற்புதமான பரிசான சுய தெரிவின் பரிசினை அவர்களுக்கு அவர் வழங்கினார், இதன் காரணமாக, இந்த சுதந்திரத்தினை தவறுதலாகப் பயன்படுத்துவதின் மூலமாக தார்மீக உடைவுக்கான சாத்தியங்கள் காணப்பட்டன. இறுதியாக அதுவே நிகழ்ந்தது. வேதாகமத்தின் முதல் புத்தகமான ஆதியாகமத்தின் மூன்றாவது அத்தியாயமானது இதைத் தெளிவாக சித்தரிக்கிறது.

வாழ்க்கையின் இயல்பு மற்றும் மரணத்தின் தீவிரமான சாத்தியம் மீதான தேவனோடு இருந்த அடிப்படையான இணக்கமின்மையில் இருந்து மனிதர்களின் கீழ்படியாமை உதித்ததாக ஆதியாகமம் 3 கூறுகிறது. முதல் மனிதர்களாகிய ஆதாம் மற்றும் ஏவாளிடம் அவர்களுடைய எல்லைக்கு உட்படாத நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை புசித்ததால், அதாவது வேறு வார்த்தைகளில் கூறின் அவருக்கும் அவர் அழித்த சுதந்திரத்திற்கும் நேர்ரெதிராக, கீழ்ப்படியாவிட்டால் நீங்கள் நிச்சயமாக சாவீர்கள் என்று தேவன் முதலிலேயே மனிதர்களை வெளிப்படையாக எச்சரித்து இருந்தார். (ஆதியாகமம் 2: 17)

மரத்தின் கனியின் இயல்பு எப்படிப்பட்டதாக இருந்தது என்பதைக் குறித்து கலந்துரையாடுவதோ அல்லது அதனை உண்பது நன்மை மற்றும் தீமையின் அறிவைத்

தரும் எனில் அது எவ்வகையான தரத்தைக் கொண்டிருக்கும் என்பதைக் குறித்து சிந்திப்பதோ எமக்கு அவசியமற்றவையாகும். அதை வியாக்கியானம் செய்கின்றபோது கதையின் முக்கியமான நோக்கத்தை தொலைத்து விடக்கூடும். எமது சிருஷ்டிக்கர்த்தாவாகிய மற்றும் ஆளுகை செய்பவராகிய அவரின் சித்தம் மற்றும் வார்த்தைக்கு எதிராக மேற்கொள்ளும் எதுவாயினும், எந்த நோக்கத்திற்காக இருப்பினும், எந்தவொரு மரணத்தின் கனியைப் புசிப்பதாக இருப்பினும் அது பாவமாகவே இருக்கிறது. படைத்தவரின் சித்தத்திற்கு எதிராக படைத்தவைகளை தூண்டுவது சிந்தையின் ஒரு கட்டமைப்பாக அமைகிறது. அதாவது படைத்தவரை புறம்பே தள்ளிவிட்டு, ஒருவரின் சுய அகந்தை ஆர்வங்களைப் பின்தொடருதல் மற்றும் வாழ்வு தொடர்பிலான வியாக்கியானத்தை மையமாக வைத்தலாகும். கொள்கை அடிப்படையில் அதுவே “பாவம்” ஆகும்.

அத்துடன் தேவன் மனிதர்களை எச்சரித்த பிரகாரமாக பாவமானது தானாகவே மரணத்திற்கு வழிநடத்திச் செல்கிறது. சரீர ரீதியிலான இன்பம் அல்லது அழகியல் ரீதியிலான மகிழ்ச்சி அல்லது தார்மீக ஞானம் மற்றும் அறிவினைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், இந்த விடயங்களே ஒரு நபருடைய ஒட்டுமொத்த வாழ்வாக அமையும் பட்சத்தில், தேவனை சார்ந்திராமல் அவரைப் புறக்கணித்து அல்லது அவருடைய வார்த்தையை மீறி நடந்து, ஒருவர் தமது வாழ்வை முழுமையாக அனுபவித்தல் என்பது அடிப்படையான மற்றும் துக்கத்துக்குரிய ஏமாற்று

செயலாக அமைகிறது. நாம் அனுபவிக்கிற நன்மையான விடயங்களுக்கான ஒரேயொரு மூலவளமாக மாத்திரம் தேவன் இருப்பது இல்லை. அவரே எமக்குக் கொடுக்கப்பட்ட நன்மையான அனைத்து விடயங்களுக்கும் இறுதியான அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் வழங்குகிற உச்ச நன்மையாக இருக்கிறார்.

ஆதியாகமம் 3இல் நிகழும் நிகழ்வானது, மனிதர்கள் தேவனைப் புறக்கணித்ததினால் பாவம் உலகினுள் நுழைந்தது. இதன் விளைவுகள் பெரிதாக அமைந்தது. மரணம் உள்ளே வந்தது. முதலில் ஆவிக்குரிய ரீதியில் மனிதர்களுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்ட பிளவும் பின்பு சரீர ரீதியிலான மரணமும் இடம்பெற்றது.

மேலதிகமாக, இந்நிகழ்வின் காரணமாக இயற்கையும் முறிவுற்றது. இது எமது முக்கிய கருப்பொருளுக்கு எம்மை அழைத்து செல்கிறது. மனிதர்களுடைய கிளர்ச்சியின் காரணமாக மனிதர்கள் தேவனின் பிரசன்னத்தை விட்டு நீங்க வேண்டியதாக இருந்தபோதிலும், தேவனுக்குக் கீழ் பூமியினை நிர்வகிக்கும் அவர்களுடைய வேலையில் இருந்து அவர்கள் உடனடியாக நீக்கப்படவில்லை. பூமியின் திறனை விருத்தி செய்யும்படியான அவர்களுடைய வேலையை செய்யும்படிக்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். “அந்த சிருஷ்டியானது சுய இஷ்டத்தினால் அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே (தேவன்) மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது” (ரோமர் 8:20-28).[28]

மூல கிரேக்க மொழியில், “மாயை” என்பது “வீணானது” என்ற அர்த்தத்தை கொண்டு வருகிறது.

அதாவது, அது வடிவமைக்கப்பட்ட இலக்கை அது அடையவில்லை என்பதையே குறிப்பிடுகிறது. படைப்பானது "அதன் இஷ்டத்தினால் அல்ல" மாயைக்கும் விரக்திக்கும் உட்படுத்தப்பட்டது என்று கூறுகையில், ஆதாமின் பாவத்தின் காரணத்தினால் தேவன் நிலத்திற்கு அழித்த சாபத்தை அது குறிப்பிடுகிறது.

> *"பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்." (ஆதியாகமம் 3:17-18)*

தங்களை உருவாக்கியவருடனான மனிதர்களின் உறவில் ஏற்பட்ட முறிவின் விளைவுகள் மனிதர்களுக்கு பாரியளவில் காணப்பட்டது. சரியான பாதையில் துடுப்பு வலிக்க மறுக்கும் படகோட்டியினால் அவர் மாத்திரம் அல்ல அந்த படகில் இருக்கும் அனைவருமே பாதிக்கப்படுவதுடன், அந்த படகும் சேதப்படக் கூடும். இதைப்போலவே, தேவனை அறியும்படியாக தேவனால் உருவாக்கப்பட்ட மற்றும் அவர்களைப் படைத்தவரின் சட்டங்களுக்கு ஏற்ற பிரகாரமாக படைப்பை அனுபவிக்கும்படிக்குத் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இடத்தில் தரித்திருப்பதற்கு மனிதம் காண்பித்த மறுப்பினால் தேவனுடைய சிறப்பான நல்ல படைப்புகள் பிழைத்துப்போய் முறிவுற்றன.

கடந்த பல நூற்றாண்டுகளாக, உலகம் மற்றும் அதன் மூலவளங்களின் அபிவிருத்தியில் பிரமிக்கத்தக்க

முன்னேற்றங்கள் ஏற்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இருப்பினும், எதுவுமே முழுமையடையவில்லை. கடந்த நூற்றாண்டுகளில் ஒரு காலத்தில் செழித்து வளர்ந்த ஆனால் இப்போது சிதைந்து போன அநேக குடியேற்றங்களைக் கண்டிருக்கிறோம். மீண்டும் மீண்டுமாக, இயற்கையானது முறிவுற்று, முட்களாலும், தொழில் பின்னடைவு, நோயாக்கி பூச்சிகள், நோய்கள், கொள்ளை நோய்கள், வறட்சி, பஞ்சம், பூமி அனர்த்தங்கள், எரிமலை வெடிப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து சுயநலம், பேராசை மற்றும் தார்மீக ஊழல் என்பவற்றினால் கட்டவிழ்க்கப்பட்ட அழிவுக்குரிய விசைகளினால் மனிதனுடைய முன்னேற்றத்தை தடை செய்கின்றது.

## நன்மை மற்றும் தீமையைப் பிரிக்கும் கோடு

நிகழ்வின் பார்வையாளர்களாக நாம் இருக்கின்றபடியினால் முழுமையாகப் பிரிக்கப்பட்டவர்களைப்போல உலகத்தின் தீமை மற்றும் வேதனையின் பிரச்சனையைக் குறித்து எம்மால் நேர்மையாகக் கலந்துரையாட இயலாது.

ஸ்டாலினின், குலாக் முகாம்களில் இருந்து தப்பித்த ரஷ்ய எழுத்தாளரான அலெக்சாண்டர் ஸொல்ஹெனிட்சின் இவ்வாறு எழுதுகிறார்:

*“இவை அனைத்தும் இலகுவாக இருப்பின் மாத்திரமே! எங்காவது நயவஞ்சகமாகத் தீய மக்கள் தீமையான காரியங்களை செய்யின், அது அவர்களை மற்ற மக்களிடம் இருந்து பிரித்து அவர்களை அழிப்பது அவசியமாக இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மனிதனின்*

*இருதயத்தின் ஊடாகவும் நன்மை மற்றும் தீமையைப் பிரிக்கிற கோடானது ஊடுருவிச் செல்கின்றது. அத்துடன், தனது சொந்த இருதயத்தின் ஒரு பகுதியை அழிக்க யார் விரும்புவார்கள்? எந்தவொரு இருதயத்தினதும் இந்தக் கோடானது வாழ்நாளின்போது மாறிக்கொண்டே இருக்கிறது. சிலசமயங்களில் அது தூ ண்டுகிற தீமையினாலே ஒரு பக்கமாக அழுத்துகின்றதுடன், சில சமயங்களில், நன்மை வளரும்படிக்குப் போதுமான அளவினை அனுமதிக்குமளவு இடம்மாறக் கூடும். வேறுபட்ட வயதுகளில், வித்தியாசமான சூழ்நிலைகளின் கீழ், ஒரு மனிதனாக இருப்பினும் முழுமையாக வித்தியாசமான மனிதர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவருடைய நாமம் எப்போதும் மாறாததுடன், நன்மை மற்றும் தீமையை முழுமையாக சொல்லுகின்ற நாமமாக அமைகின்றது.”* [29]

எமது உள்ளுணர்வில் நாம் அனைவரும் அறிந்திருந்ததை வெளிப்படையாகக் கூற ஸெ ால்ஹெனிட்சின் ஆயத்தமாக இருந்தார். அதாவது, படைப்பில் நன்மை மற்றும் தீமை இருப்பதோடு, மனிதத்திலும் பொதுவாக அது இருக்கின்றது. ஆகவே, எம் ஒவ்வொருவரினுள்ளும் நன்மை மற்றும் தீமை காணப்படுகின்றது. நாமும் இந்தப் பிரச்சனையின் ஒரு பகுதியாக இருக்கிறோம்.

நாத்திக தத்துவவியலாளரான ஜோன் கிரே எதிர்பாராத ஆதரவை இங்கு கொடுக்கிறார்:

*"மனித உயிர்கள் ஆரம்பத்தில் இருந்தே நல்ல ஜீவராசிகளாக இருப்பதோடு அவைகள், வன்முறை மற்றும் ஒடுக்குமுறையினால் வரலாற்றில் கணக்கில்லாத வகையில் துன்புறுத்தப்பட்டுள்ளனரென மனித உயிர்கள் பற்றி நிலவுகின்ற கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ளல் முக்கிய தேவையாகும். இங்குதான் யதார்த்தத்தின் கருப்பொருள் மற்றும், நிலவுகின்ற கருத்து தொடர்பிலான முக்கியமான தடுமாறும் புள்ளிக்கு வருகிறோம். அது மனித உயிர்களின் உள்ளார்ந்த குறைபாடு தொடர்பிலான வலியுறுத்தலாகும்.*

*"நவீன யுகத்திற்கு முன்னான அனைத்து சிந்தனையாளர்களும், மனித இயல்பானது நிர்ணயிக்கப்பட்டதும், குறைபாடுடையதாகவும் கருதினதுடன், இந்த விடயம் தொடர்பில் அவர்கள் ஏதோ ஒரு வகையில் உண்மைக்கு நெருக்கமாக இருந்தார்கள். எந்தவொரு அரசியல் கொள்கைகளும் மனிதனின் தூண்டுதல்கள் இயற்கையாக சமாதானத்தை உண்டு பண்ணுவதாகவோ இருக்கும் என்று அனுமானிப்பதற்கு நம்பத்தகுந்தவையாக அமைவது இல்லை."* [30]

தேவனுக்கு எதிரான மனிதர்களின் கிளர்ச்சியின் தாக்கமான, உலகத்தின் பாவம் குறித்தான யதார்த்தம் தொடர்பில் ஆதியாகமம் கற்பிக்கிறதை, ஒரு நாத்திகர் ஆதரிக்கின்ற கூற்றாக அமைகிறது.[31]

நாம் குறைபாடுடையவர்கள் என்ற உண்மையை நாம் புரிந்துகொண்டவுடன், தார்மீக தீமையின் பிரச்சனைக்கான

யதார்த்தமான உருவாக்கமாக பின்வரும் கேள்வி அமையும். அதாவது " நான் சிந்தித்து தீமையை செய்கிறேன் ., தேவன் ஒருவர் இருப்பார் எனில், அவர் ஏன் என்னை சகித்துக் கொள்கிறார்?"

## வித்தியாசமான ஒரு கேள்வி

மனித இயல்பு மற்றும் பௌதீக இயல்பு ஆகிய இரண்டு தொடர்பிலும் ஆழமான குறைபாடுகள் உள்ளன என்பது வெளிப்படையானதொன்று ஆகும். இந்த உலகமானது, வன்முறை மற்றும் தார்மீகமற்ற மனிதப் பழக்கங்கள் ஆகிய இரண்டினாலும் மற்றும் பூமி அனர்த்தங்கள், சுனாமி, புற்றுநோய் மற்றும் கொரோனோ வைரஸ் பெரும் கொள்ளை நோய் போன்றவற்றால் நிறைந்தவையாக இருக்கிறது.

இப்போது, நல்ல, அன்பான, சர்வ வல்லமையுள்ள தேவன் என்ன செய்து இருக்கலாம் அல்லது என்ன செய்து இருக்கக்கூடும் என்று நாம் காலாகாலத்திற்கு விவாதிக்கக்கூடும். ஆனால், ஒரு குறிப்பிட்ட கலந்துரையாடலின் பெறுபேறு தொடர்பில் நாம் எப்போதும் திருப்தியடைவது இல்லை என்பதை அனுபவங்கள் காண்பிக்கின்றன.

இதற்கான காரணம் யாதெனில், நாம் என்ன கூறினாலும், நாம் இருக்கிற இடத்திலேயே நாம் இருக்கிறோம். அவ்வாறே உலகம் காணப்படுகிறது. நாம் பாழாக்கப்பட்ட தலைமைத் தேவாலயமாவோம். பூவிலிருந்து சூரியன் வரையான அவை மலர்தலில் உள்ள அழகு மற்றும்

கொரோனோ வைரஸானது மனிதனின் சுவாசத்தொகுதியை அழிப்பதினால் ஏற்படும் அவலட்சணம் ஆகிய அனைத்தினாலும் வழங்கப்படும் கலவையான சித்திரங்களுக்கு முகங்கொடுப்பவர்களாக இருக்கிறோம்.

ஒரு கணிதவியலாளராக, ஒரு கேள்விக்கான பதிலைக் கண்டுபிடிக்கும்படிக்கு பல வருடங்கள் முயற்சித்தும் எம்மால் இயலாத பட்சத்தில் இன்னொரு கேள்வியைப் பார்ப்பது சிறந்தது என்று சிந்திக்க ஆரம்பிப்பதற்கே நாம் பழக்கப்பட்டுள்ளோம்.

நாம் கேட்கக்கூடிய இன்னுமொரு கேள்வி உள்ளது. உயிரியல் அழகு மற்றும் சாவுக்கேதுவான நோய்கிருமிகள் ஆகிய இரண்டையும் முன்வைக்கும் அண்டத்தில் நாம் வாழுகிறோம் என்று நாம் ஏற்றுக்கொண்டோம் எனில், எமது வாழ்வு மற்றும் எதிர்காலங்கள் தொடர்பில் நம்பும்படியான தேவன் இருக்கிறார் என்பது தொடர்பில் ஆதாரங்கள் உள்ளனவா?

# 5. அன்பிற்கான ஆதாரம்

தேவனை நாம் விசுவாசிக்க வேண்டுமெனில் தேவனுடைய குணாதிசயத்தில் உள்ள நன்மைக்கான திருப்திகரமான ஆதாரம் எமக்கு தேவையாக அமைகிறது. ஆகவே, இந்த நேரத்தில் கிறிஸ்தவ போதனையின் மையத்திற்கு செவிமடுக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இது தொடர்பில் பரீட்சயமானவர்களாக இருப்பினும் அல்லது இது புதியதொன்றாக இருப்பினும், கொரோனோ வைரஸ் அல்லது ஏனைய பெரும் கொள்ளை நோய், நோய்கள் அல்லது இயற்கையான உலகில் உள்ள முறிவுற்ற நிலை என்பவற்றின் இருப்பினால் தேவன் மீதான நம்பிக்கை சீரற்றதாகவே இருக்கின்றது என்ற முடிவிற்கு வரும் முன்பதாக இதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

மனித குமாரனான இயேசு கிறிஸ்துவானவர் மனுவுருவான தேவன் – படைத்தவர் மனிதனானார் என்று கிறிஸ்தவம் கூறுகிறது. கிறிஸ்தவ செய்தியின் மையமானது, எருசலமேக்கு வெளியே நிகழ்ந்த அவருடைய மரணமாக இருக்கிறது. மனுவுருவான தேவனாக அவர் இருப்பின் அவர் சிலுவையில் என்ன செய்தார்? என்ற கேள்வி எழுகின்றது. தேவன், மனிதர்களின் வேதனை மற்றும் துன்பத்தில் இருந்து அவர் தூரமாக இருக்கவில்லை, மாறாக அவரே அதை அனுபவித்தார் என்பதை இது காண்பிக்கிறது.

ஆகவே, கிறிஸ்தவன் என்பவன், வேதனை, துன்பம் மற்றும் கொரோனோ வைரஸ் பிரச்னையை தீர்த்தவன் அல்ல, மாறாக துன்பதை அனுபவித்த தேவனை அன்பு செய்து நம்பும் ஒருவனாக இருக்கிறார்.

இது கதையின் பாதியாகவே இருக்கின்றது. இயேசு செய்ததில் துன்பமே இறுதியாக இருந்து இருப்பின் நாம் இதைக் குறித்து எப்போதும் கேட்டு இருக்க மாட்டோம். ஆனால் இதுவல்ல முடிவு. முதல் உயிர்த்தெழுதல் ஞாயிறின்போது எருசலேமை சலசலப்பிற்கு உட்படுத்திய செய்தி இதுவேயாகும். இந்த செய்தியே முதல் நூ ற்றாண்டின் திருச்சபையை உறுதியாக்கியது. அதாவது இயேசு மரணத்தை வென்றார்: அதாவது அவர் மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்ததுடன், அவரே மனிதர்களுக்கான இறுதி நீதிபதியாக இருப்பார்.

இதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. நாத்திக உலகக்கண்ணோட்டத்தினால் சமாளிக்க முடியாத அடிப்படையான சிரமத்தை இது முன்வைக்கிறது: அதுவே இறுதியான நீதியின் பிரச்சனையாக அமைகின்றது. நாம் அனைவரும் அறிந்திருப்பதுபோல, பெயர் தெரியாத கூறப்படாத மில்லியன் கணக்கிலான மனித உயிர்கள் வரலாறு முழுவதுமாக துக்ககரமான அநீதியினால் துன்பப்பட்டு, துயரத்தின் வாழ்வின் பின்பு எந்தவொரு நிவர்த்தியும் இன்றி இறந்து போய் இருக்கிறார்கள். கொரோனோ வைரஸினால் பாதிக்கப்பட்ட பலருள் சிலருக்கு இது பொருந்தும் என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை.

இந்த மக்கள் தங்கள் வாழ்வில் நீதியைப்

பெற்றுக்கொள்ளவில்லை. நாத்திகத்தின் அடிப்படையில் மரணமே இறுதியாக இருப்பதினால் நீதி சரிக்கட்டப்படும் அடுத்த வாழ்வு இல்லாமல் இருக்கிறது. இறுதியான நீதிபதி இல்லையேல் இறுதியான நீதியும் இல்லை.

ஆனால் உயிர்த்தெழுதலானது, நீதி மாயை இல்லை என்பதை அறிவிக்கிறதுடன் நீதிக்கான எமது வாஞ்சையானது பயனற்றுப்போகாததாக இருக்கிறது. துஷ்பிரயோகம் செய்பவர்கள், தீவிரவாதிகள் மற்றும் இந்த உலகின் தீய ஆண்களும் பெண்களும் நிச்சயமாக ஒரு நாள் நீதிக்காகக் கொண்டு வரப்படுவார்கள். நீதிக்காக செயல்படுவது கிறிஸ்தவ கடமை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இறுதியான நீதியின் விடயங்களைத் தீர்த்து வைத்தலில் நாம் எதையும் செய்ய முடியாது என்பதை நான் இங்கு குறிப்பிடுகிறேன். வரைவிலக்கணத்தின்படி, நாத்திகம் எதனையும் அறியாததாக இருக்கிறது. நாத்திகமானது எமது தார்மீக உணர்வுகளுக்கான கேடு விளைவிக்கும் ஒன்றாக உள்ளது.

இதற்கு முரண்பாடாக, வேதாகமக் கண்ணோட்டமான இறுதியான நீதியானது மிகவும் உண்மையான ஒன்றாகும். தேவனே தார்மீக சட்டங்களுக்கு பின்னாக இருக்கும் அதிகாரமாக இருக்கிறார். அவரே அதனை வெற்றி கொள்பவராவார். பூமியின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரையான நிகழ்த்தப்பட்ட அனைத்து அநீதிக்குமான பூரணமான நீதி வழங்கப்படுகையில் இதன் விளைவாக இறுதி நியாயத்தீர்ப்பு வழங்கப்படும். நீதி என்பது பரிகாசத்திற்குரியது அல்ல.

கிறிஸ்தவ அப்போஸ்தலனாகிய பவுல், அத்தேனே பட்டணத்தின் மார்ஸ் மேடையில் இருந்த தத்துவவியலாளர்களுக்கு விரிவுரை செய்கையில், இயேசுவானவர் மரணத்தில் இருந்து எழுப்பப்பட்டு உலகத்தின் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று கூறுவதானது மனிதர்களின் ஆழமான கேள்விகளுக்கான இறுதியான பதில் இறுதியில் கிடைக்கும் என்பதற்கான உத்தரவாதம் எமக்கு இதில் இருந்து கிடைக்கிறது.[32]

நீதி நடப்பிக்கப்படும்படிக்கு காத்திருக்கும் மனித இயல்பு காணப்படுகிறது எனிலும், இறுதியான நியாயம் தொடர்பில் எதிர்மறையாக மாறுத்தரத்தைக் காண்பிக்கும் இயல்பும் உள்ளது. ஏனெனில், தேவனுக்கு முன்னான எமது நிலையை குறித்ததான கேள்வியை இது எழுப்புகின்றது. தார்மீக தீமைக்கு எதிராக போராட்டம் செய்யும் மற்றும் இதில் தலையிடாததினால் தேவனை குற்றப்படுத்தும் சிலர் “இவ்வாறான தேவனை நம்ப இயலாது” என்று கூறுகிறவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய எதிர்கால நியாயத்தீர்ப்பிற்கான எமது இயற்கையான மாறுத்தரத்தில் உள்ள பிரச்சனை யாதெனில், எங்களுடைய வாழ்வில் அல்லாது மற்றவர்களுடைய வாழ்வில் தேவன் தலையீடு செய்யும் வரையில் மாத்திரமே நாம் தேவனுடைய தலையீட்டினை வரவேற்கிறோம்.

உண்மை யாதெனில் நாம் மற்றவர்களுடைய வாழ்வில் உள்ள தீமையையே காண விளைகிறோம். எங்களுடையதைக் காண விரும்புவது இல்லை. ஆகவே,

தேவன் என்ன செய்ய வேண்டும் என்று நாம் சிந்திக்கையில், எம்மையல்ல எம்மைச்சூழ உள்ள தீய மக்களையே தேவன் இல்லாது செய்ய வேண்டுமென்று எம்முள் அநேகர் நினைக்கிறோம். நாம் அந்தளவு மோசமானவர்கள் அல்லவே!

"அனைவரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்" என்று வேதம் கற்பிக்கிறது.[33] எம்முள் யாருமே தார்மீக தரங்களைப் பேணவில்லை. தேவனும் பத்துக் கட்டளைகளும் இதை மிகவும் தெளிவாகக் கூறுகிறது.[34] ஆகவே, நாம் அறிந்திருப்பினும் அறியாதிருப்பினும், தேவனுக்கும் எமக்கும் இடையே வரும் பாவம் மற்றும் குற்றத்தின் பிரச்சனைக்கான தீர்வு, எம் அனைவருக்கும் அவசியமாகிறது.

கிறிஸ்தவத்தின் அடிப்படையில் இந்தத் தீர்வானது சிலுவையிலும் இயேசுவின் உயிர்த்தெழுதலிலுமே காணப்படுகிறது. இந்த நிகழ்வுகள் வெறுமனே தீமை மற்றும் வேதனையின் பிரச்சனை மற்றும் நீதியின் பிரச்சனைக்கான தீர்வு என்பவற்றை மாத்திரம் கொடுப்பனவாக அமையவில்லை. அவை "இயேசு" எனும் நாமம் எதைக் குறிக்கிறது என்று எமக்குக் காண்பிக்கிறது. "அவர் தமது மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்தேயு 1:21). இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் நிமித்தம், தங்களுடைய தனிப்பட்ட தீமை மற்றும் மனித வேதனை மற்றும் துன்பத்திற்கு செய்த தனிப்பட்ட பங்களிப்பு தொடர்பில் பாவ அறிக்கை (அதாவது "மனம் திரும்புதல்") செய்பவர்கள் மற்றும் இயேசுவை தமது தேவனாக விசுவாசிப்பவர்கள்

மன்னிப்பைப் பெற்றுக்கொள்வார்கள். அண்டத்தை உருவாக்கி நடத்திச் செல்லும் தேவனுடனான சமாதானம் புதிய வல்லமைகளுடனான புதிய சக்தி மற்றும் துன்பம் எப்போதும் இல்லாது இருக்கும் ஒரு உலகம் தொடர்பான வாக்குத்தத்தம் என்பவற்றைப் பெற்றுக்கொள்வார்கள். இங்கு கிறிஸ்தவமானது எந்தவொரு தத்துவத்துடனோ அல்லது சமயத்துடனோ போட்டி போடுவது இல்லை. ஏனெனில் எதுவுமே, இந்த வாழ்வில் அறியப்பட்டு நித்திய காலமாக தொடரும் மன்னிப்பையோ தேவனுடனான சமாதானத்தையோ வழங்குவது இல்லை.

கிறிஸ்தவன் என்பவன், துன்பத்தின் பிரச்னையை தீர்த்தவன் அல்ல. மாறாக *அவர்களுக்காக* துன்பப்பட்ட தேவனை நேசிக்கும் மற்றும் விசுவாசிக்கும் ஒருவனாக இருக்கிறான்.

## இரு கிரீடங்கள்

அனர்த்தங்கள் மற்றும் பெரும் கொள்ளைநோய்கள் தொடர்பில் சமாளிக்க இது எவ்வாறு எமக்கு உதவி செய்கிறது?

இந்த வைரஸானது பார்வைக்கு கிரீடம் போன்று புலப்படுவதினால் “கொரொனோ” என அழைக்கப்படுகின்றது (இலத்தீன் மொழியில் கொரோனோ). கிரீடமானது வல்லமை மற்றும் அதிகாரத்திற்கான அடையாளமாகும். நிச்சயமாக இந்த வைரஸானது மனிதர்களாகிய எம்மீது மகத்தான வல்லமையைக் கொண்டிருக்கின்றது. வெற்றுக்கண்ணிற்குப் புலப்படாததாக இருப்பினும், அநேக

மில்லியன், கூறப்போனால் பில்லியன் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக் கூடாது என்பது தொடர்பில் வற்புறுத்தியிருக்கிறது என்பதைக் குறித்து சிந்தியுங்கள்.

இது எமது பலவீனத்தை வலுவாக எமக்கு நினைவுபடுத்துகின்றது. மனிதர்களாகிய நாம் மரணிக்கக் கூடியவர்கள் என்று நாம் இலகுவாக மறந்து போகக்கூடும். நாம் படைப்புகளுடன் வைத்துள்ள உறவும், படைப்புகள் எம்முடன் வைத்துள்ள உறவும் ஒழுங்கீனமாயிற்று என்பதற்கு கொரோனோ வைரஸ் சான்றாக இருக்கிறது. இது விபத்து அன்று.

ஆனால் இன்னொரு கொரோனோவில் நம்பிக்கையைக் கண்டடைகிறோம். அதுவே இயேசுவின் சோதனை மற்றும் அவருடைய மரணத்திற்கு முன்பதாக அவருடைய சிரசின் மீது வலுக்கட்டாயமாக சுமத்தப்பட்ட முள் கிரீடமாகும்.

படைப்புகள் மற்றும் படைத்தவருக்கு இடையிலான பிரிவு எவ்வளவு ஆழமாகப் போகக்கூடும் என்று அந்த கொரோனோ காண்பிக்கிறது. பூமியானது தேவனுடைய படைப்பு, எம்முடையது அல்ல. நாம் அதன் உரிமையாளர்கள் அல்ல, ஆனால் அவ்வாறு இருக்க நாடுகிறோம். நாம் குடியிருப்பவர்களும், உக்கிராணக்காரராகவும் இருப்பதோடு, எம்முள் அநேகர் எமது சொந்த வாழ்வையும் மற்றவர்களுடைய வாழ்க்கையையும் குழப்பியவர்களாகவும், இந்த உலகத்திற்கு என்ன செய்துள்ளோம் என்று கூற முடியாத குறைபாடுடையவர்களாக இருக்கிறோம். தேவனுடன் ஒன்றும், தேவன் இன்றி ஒன்றும் என்று மனிதர்களுக்கு இரு பரதீசுகள் இருக்க முடியாது. உலகத்தில்

துல்லியமானவற்றை கட்ட முடியும் என்று நாம் கொண்டுள்ள மாயையை கொரோனோ வைரஸானது மிகவும் வேகமாக அகற்றி வருகின்றதுடன், எமது ஆரம்பக் குறைபாடு மற்றும் திருப்திகரமான மாறுத்தரத்தைக்கூட உண்மையான பயம், விரக்தி மற்றும் கோபமாக மாற்றுகின்றது.

மனிதனின் பாவத்தின் விளைவினால் சேதமடைந்த முறிவுற்ற உலகத்திலே, வேதனையும் துன்பமும் தவிர்க்க முடியாதவையாக இருக்கின்றது. இருப்பினும், உலகம் பூராகவும், கொரோனோ வைரஸானது பரவும் வரையில் இந்த யதார்த்தத்தில் இருந்து நாம் மறைந்தே இருந்தோம். இப்போது, நாம் அதையோ அல்லது அது எழுப்புகின்ற வாழ்வு மற்றும் மரணம் பற்றிய பெரிய கேள்விகளையோ எம்மால் புறக்கணிக்க முடியாது. சி.எஸ். லூவிஸ் இவ்வாறு கூறுகிறார்:

> *"எம்மால் மகிழ்ச்சியைக் கூட புறக்கணித்து விட முடியும். ஆனால், வேதனையானது முகங்கொடுக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. எமது மகிழ்ச்சியின்போது தேவன் மெல்லப் பேசுகிறார், எமது மனசாட்சியுடன் பேசுகிறார், ஆனால் எமது வேதனைகளின்போது சத்தமாகப் பேசுகிறார். இதுவே செவிடான உலகை எழுப்புகின்ற அவருடைய ஒலிபெருக்கியாக இருக்கிறது."* [35]

ஒருவேளை எம்முள் ஒவ்வொருவரும் மரணிப்போம் என்னும் இறுதியான புள்ளிவிவரவியலை எமக்கு நினைவுபடுத்தும் முகமான பாரிய ஒலிபெருக்கியாக கொரோனோ வைரஸ் இருக்கக்கூடும். நாம் பல

ஆண்டுகளாகப் புறக்கணித்த தேவனை திரும்பப் பார்க்கவும், எம்மை அவருடனான உறவினுள் மரணத்திற்குப் பின்னான புதிய முறிவற்ற உலகத்தினுள் எம்மை கொண்டு செல்லும்படியாக முள் கிரீடத்தை சூட்டியவரை காணும்படியாக இது எம்மை தூண்டியது எனில், கொரோனோ வைரஸ் சிதைத்த அழிவினை பார்க்கிலும், அது மிகவும் ஆரோக்கியமான நோக்கத்தை செய்வதாக அமைகிறது.

# 6. தேவன் உருவாக்கும் வேறுபாடுகள்

இந்தப் பெரும் கொள்ளைநோய் தொடர்பில் கிறிஸ்தவர்கள் எவ்வாறான மாறுத்தரத்தைக் காண்பிக்க வேண்டும்? இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கான பல்வேறுபட்ட படிநிலைகள் உள்ளன.

## கவனிக்கப்பட வேண்டிய ஆலோசனை

முதலாவதாக செயலளவில் , நாளுக்குரிய சிறந்த மருத்துவ ஆலோசனையைக் கவனிக்கும்படிக்கு நாம் ஞானமுள்ளவர்களாக இருக்கிறோம். சில செய்தி ஒளிப்பரப்புகளின் அடிப்படையில் அறிவுரைகள் நிலையற்றதாக அல்லது குழப்புகின்றனவாக இருக்கின்றபோதே பிரச்சனை எழுகிறது.

வைரஸ் பரவலை குறைக்கும் பொருட்டு, வயதானவர்கள் மற்றும் இருதயம் மற்றும் சுவாசத்தொகுதியில் குறிப்பிடத்தக்க மருத்துவ நிலைகளைக் கொண்டுள்ளவர்கள் போன்ற அதிக ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு சுய தனிமைப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுவாரஸ்யமான வகையில், புராதன வேதாகமக் காலப்பகுதிகளில், தொற்றுக்குள்ளாக்கும் நோய்களின் பரவலை தவிர்க்கும் பொருட்டு சுய தனிப்பாட்டுக்கான தேவை தொடர்பில் இஸ்ரவேலருக்கு அறிவுரை

வழங்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டு புத்தகமான லேவியராகமமானது, சில நோய்கள் தொடர்பில் ஏழு நாள் தனிமைப்பாட்டையும் மற்றையவைகளுக்கு முடிவிலி காலத்தையும் பரிந்துரைக்கிறது.[36]

மருத்துவ அறிவுரையின் அடிப்படையாக இருக்கும் இவ்வாறான மாறுத்தரமானது நிச்சயமாக அவநம்பிக்கைக்கான ஆதாரமன்று. தேவனால் எம்மைப் பாதுகாத்து எம்மைக் குணமாக்க இயலும். ஆனால், நாம் ஞானமாக இருந்து, அவர் எமக்கு அளித்து இருக்கும் மருத்துவம் உள்ளிட்டதான அனைத்து மூலவளங்களையும் நாம் பயன்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அத்துடன், சமூகத்தில் இருந்து விலகி இருப்பதானது சுயநலத்தின் வெளிப்பாடன்று. மாறாக ஒருவரின் அயலவனை நேசித்து அவரை பாதுகாக்கும் செயற்பாடாகும்.

அயலானை நேசித்தல் என்று கூறுகையில், குறைந்தளவு ஆபத்தில் உள்ளவர்கள், பலவீனமானவர்களை சந்தித்து (சூழ்நிலைகளும் கட்டுப்பாடுகளும் அனுமதியளிப்பின்) எல்லைப்படுத்தப்பட்ட நேரமே இருப்பினும் கூட, அவர்களுடைய பொருட்கள் வாங்குவதில் உதவி செய்தல் மற்றும் அதிகமான தேவை உள்ளவர்களோடு இணைத்திருத்தல் ஆகியவையாகும்.

## கண்ணோட்டங்களைப் பேணுதல்

அணு ஆயுதங்களின் பயன்பாடு தொடர்பில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு மாறுத்தரத்தைக் காண்பிக்க வேண்டும் என்பது

தொடர்பில் சி.எஸ் லூயிஸ் முன்பு எழுதியிருக்கிறார். இதை நான் மீள் உருவாக்கம் செய்து உள்ளேன். எமது சொந்த சூழ்நிலைக்கு பிரயோகிக்க உதவி செய்யும் வகையில், தொடர்புடைய குறிப்புகளில் சரியான எண்ணக்கருவினைக் கொடுக்கும்படிக்கு "கொரோனோ வைரஸ்", "வைரஸ்" அல்லது "பெரும் கொள்ளை நோய்" என்று சதுர அடைப்பினுள் நான் உட்புகுத்தியுள்ளேன் (சிறிது பிழை இருப்பதை நான் ஒப்புக் கொள்வதோடு, அதற்காக மன்னிப்பு கோருகிறேன்):

*ஒரு வகையில் 'அணுகுண்டினைக்' (கொரோனோ வைரஸ்) குறித்து நாம் அதிகளவு சிந்திக்கிறோம். 'அணு ஆயுத' (பெரும் கொள்ளைநோய்) யுகத்தில் நாம் எவ்வாறு வாழப்போகிறோம்? நான் பதில் கூற ஆர்வமுடன் இருக்கிறேன்: "ஏறத்தாழ ஒவ்வொரு வருடமும் இலண்டனைப் பாதித்த பிளேக் இருந்த பதினாறாம் நூற்றாண்டில் நீங்கள் வாழ்ந்தது போல, அல்லது ஸ்கண்டினேவியாவில் இருந்து வரும் படகோட்டிகள் உங்கள் கழுத்தை எந்தவொரு இரவிலும் வெட்டி விடும் கடற்கொள்ளையர்களின் யுகத்தில் நீங்கள் வாழ்ந்தது போல் அல்லது புற்றுநோய் உள்ள யுகத்தில், சிபிலிசு உள்ள யுகத்தில், முடக்குவாதம் உள்ள யுகத்தில், விமானத்தாக்குதலின் யுகத்தில், புகையிரத விபத்துக்களின் யுகத்தில், வாகன விபத்துகளின் யுகத்தில் நீங்கள் ஏற்கனவே வாழ்ந்ததைப் போன்றதாகும்."*

*"வேறு வார்த்தைகளில் கூறின், எமது சூழ்நிலையின்*

*புதிய தன்மையை நாம் மிகைப்படுத்திக் கூறாமல் இருக்கக்கடவோம். நீங்கள் மற்றும் நீங்கள் நேசிக்கும் அனைவரும் அணு ஆயுதம் (கொரோனோ வைரஸ்) கண்டுபிடிக்கப்பட முன்பே மரணத்திற்கு மரணித்திருப்பார்கள்: அத்துடன் எம்முள் பாரிய அளவிலானோர் விரும்பத்தகாத விதத்தில் மரணிக்கப்போகின்றோம், என்னை நம்புங்கள். எமது மூதாதையரைப் பார்க்கிலும் நாம் ஒரு பெரிய அனுகூலத்தைக் கொண்டிருக்கிறோம் - அது மயக்க மருந்தாகும். இன்னும் அது நம்மிடம் உள்ளது. மரணத்தினால் ஏற்கனவே முறுக்கப்பட்ட மற்றும் மரணமானது தெரிவாக இல்லமால் நிச்சயமாக இருக்கும் உலகத்தினுள், வேதனைக்குரிய மற்றும் முற்கூட்டிய மரணத்திற்கான இன்னுமொரு வாய்ப்பினை (கொரோனோ வைரஸ்) விஞ்ஞானிகள் சேர்த்து இருப்பது குறித்து நாம் முணுமுணுப்பதும் கவலைப்படுவதும் மிகவும் கேலிக்கிடமாக அமைகிறது.*

*"எம்மை ஒன்று சேர்ப்பதே நாம் செய்யக்கூடிய முதல் செயற்பாடாகவும், கூறவேண்டிய முதல் குறிப்பாகவும் இருக்கிறது. நாம் அனைவரும் அணு ஆயுதத்தினால் (கொரோனோ வைரஸ்) மரணிக்கப் போகின்றோமானால், அந்தக் குண்டானது (வைரஸ்) வரும்போது அணுகுண்டினைப் (வைரஸ்கள்) பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் ஒன்றாகவோ அடைபட்ட பயந்த ஆடுகளைப் போன்றவர்களாக அல்லாமல் ஜெபம் செய்தல், வேலை செய்தல், கற்பித்தல், வாசித்தல், இசையைக் கேட்டல், பிள்ளைகளைக் குளிப்பாட்டுதல்,*

*டெனிஸ் விளையாடுதல், நண்பர்களுடன் விளையாட்டை பற்றிக் கதைத்தல் போன்ற அர்த்தமுள்ள மனித காரியங்களை செய்வதைக் காணட்டும். எம்மைத் தேடி வரும் அவைகளால் எமது உடலை சிதைத்துப் போட இயலும் (ஒரு நுண்ணங்கியினால் இதைச் செய்ய இயலும்) ஆனால் அவற்றால் எமது சிந்தனைகளை ஆட்கொள்ள இயலாது."* [37]

இது கடினமான வாசிப்பாக இருப்பினும் கூட, கிறிஸ்தவ விசுவாசமானது எமக்கு வித்தியாசமான கண்ணோட்டத்தை வழங்குகிறது என்பதை இது நினைவுபடுத்துகிறது.

## உங்கள் அயலவரை நேசியுங்கள்

மூன்றாவதாக, நாம் அன்புகூர அழைக்கப்பட்டு இருக்கிறோம். நாம் அறிந்துள்ள சில ஆரம்ப பெரும்கொள்ளை நோய்களைப் பற்றி நான் ஆரம்பத்தில் பட்டியலிட்டிருந்தேன். அந்தத் தருணத்திலே அவற்றுக்கு கிறிஸ்தவர்கள் எவ்வாறு மாறுத்தரத்தைக் காண்பித்தார்கள் என்பதைக் குறித்து கூறியிருக்கவில்லை. குடும்பக் கற்கைக்கான நிறுவனத்தின் சக ஆராய்ச்சியாளரும், மக்கள் தொகை நுண்ணறிவு ஆலோசனை நிறுவனத்தின் ஆலோசகராகவும் இருந்த லைமன் ஸ்டோன் என்பவர் "கிறிஸ்தவமானது 2000 வருடங்களாக கொள்ளைநோய்களை கையாண்டு வருகின்றது"

என்று அண்மை காலத்தில் தலைப்பிடப்பட்ட கட்டுரையில் இவ்வாறு எழுதுகிறார்:

*"உரோமப் பேரரசின் கால் பங்கினைக் கொன்ற, 2ஆம்*

*நூற்றாண்டின் கொடிய கொள்ளைநோயான அண்டோனின் கொள்ளை நோயானது, கிறிஸ்தவத்தின் பரம்பலுக்கு வழிவகுத்தது. ஏனெனில் கிறிஸ்தவர்கள், நோயாளிகளைப் பார்த்துக் கொண்டதுடன், கொள்ளைநோயானது, கோபத்தின் செயலினாலும், வேறுபட்ட தெய்வங்களினாலும் வரவில்லை, மாறாக அன்பான தேவனுக்கு எதிராக செய்யப்பட்ட கிளர்ச்சியினாலான நாசமாக்கப்பட்ட படைப்புகளின் பலனாலேயே உருவாகியுள்ளது என்கிற ஆவிக்குரிய மாதிரியையும் வழங்கினார்கள்.*

*"ஆனால் மிகவும் பிரசித்தமான கொள்ளை நோய் எனில் அது சைபிரியன் கொள்ளைநோயாகும். தனது பிரசங்கத்தில் இந்த நோய் தொடர்பில் வண்ணமயமான விடயங்களைக் கூறிய பாதிரியாரின் பெயரே சூட்டப்பட்டிருக்கிறது. இபோலாவை ஒத்த ஒரு நோயாக இருக்கக்கூடும், சைபிரியன் கொள்ளை நோயானது, மூன்றாம் நூற்றாண்டில் உரோம உலகில் நெருக்கடியை உருவாக்கியது. ஆனால் இது இன்னுமொரு விடயத்தையும் செய்தது. அது கிறிஸ்தவர்களின் பரவலான வளர்ச்சியைத் தூண்டியது. கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக (பரலோகத்தில் இருப்பவர்கள்) துக்கிக்க வேண்டாம் என்றும், வாழ்பவர்களை பராமரிப்பது தொடர்பில் செய்யப்படும் முயற்சியை இரட்டிப்பாக்கவும் என்று சைபிரியன் பிரசங்கங்கள் கிறிஸ்தவர்களுக்குக் கூறின. அவருடைய சக பாதிரியாரான டியோநிசியஸ் எவ்வாறு கிறிஸ்தவர்கள் 'ஆபத்தினைக் குறித்து*

*பொருட்படுத்தாது...சுகயீனமாய் இருப்பவர்களை கவனித்ததுடன், அவர்களுடைய ஒவ்வொரு தேவையையும் சந்தித்தார்கள்.”* [38] *என்று வர்ணிக்கிறார்.*

கொள்ளைநோய் தொடர்பிலான கிறிஸ்தவர்களின் மாறுத்தரத்தை விசுவாசிகள் மாத்திரம் கவனிக்கவில்லை. ஒரு நூற்றாண்டின் பின்பு, தீவிரமான பிறசமய பேரரசர் ஜூலியன், “கலிலேயர்கள்” எவ்வாறு கிறிஸ்தவர் அல்லாத நோயாளிகளைக் கவனித்தார்கள் என்று கசப்புடன் முறையிட்டபோதும், திருச்சபை வரலாற்று ஆசிரியரான பொன்டியானுஸ் எவ்வாறு “நன்மையானது விசுவாச வீட்டினருக்கு மாத்திரமன்றி அனைத்து மனிதர்களுக்கும் செய்யப்படல் வேண்டும்” [39] என்பதை உறுதிப்படுத்தினார் என்று விவரிக்கிறார். மற்றைய நகரங்களை விடவும், கிறிஸ்தவ சமூகம் இருந்த நகரங்களில் இறப்பு வீதம் அரை மடங்காக இருந்தது என்று சமூகவியலாளர் மற்றும் சமய மக்கள் தொகை கணக்காளரான ரோட்நி ஸ்டார்க் கூறுகிறார்.[40]

வரலாறு முழுவதுமாக தியாகத்துடனான பராமரிப்பின் பழக்கம் மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருந்தது. 1527இல், ஜேர்மனியின் விட்டென்பேர்க் நகரத்தை தாக்கிய புபோனிக் கொள்ளைநோயின்போது தப்பித்து, தன்னைப் பாதுகாக்குமாறு விடுக்கப்பட்ட அழைப்புகளை மார்டின் லூத்தர் (மறுமலர்ச்சியினை ஆரம்பித்தவர்) மறுப்பு தெரிவித்தார். மாறாக, அவர் இருந்து நோயாளிகளுக்கு ஊழியம் செய்தார். மறுப்பு தெரிவித்ததற்கான விலையாக அவருடைய மகள் எலிசபெத்தின் வாழ்வு மறைந்தது. ஆனால் இது, “கொள்ளைநோயின்போது கிறிஸ்தவர்கள்

தப்பிப்பதா இல்லையா” என்ற துண்டுப்பிரதியை விளைவாக்கியது. இதில், கொள்ளைநோய் தொடர்பில் கிறிஸ்தவர்களினது மாறுத்தரம் பற்றிய தெளிவான பதிலினை லூத்தர் வழங்குகிறார்:

*“நாம் எமது பதவியில் மரிக்கிறோம். கிறிஸ்தவ வைத்தியர்கள் தங்களுடைய வைத்தியசாலைகளை கைவிட முடியாது, கிறிஸ்தவ ஆளுநர்கள் தங்கள் மாவட்டங்களில் இருந்து தப்பிக்க முடியாது, கிறிஸ்தவ போதகர்கள் தங்கள் திருச்சபை அங்கத்தவர்களை கைவிட முடியாது. கொள்ளைநோய் எமது கடமைகளை மறைத்து விடுவது இல்லை. அது சிலுவையை நோக்கித் திருப்புகின்றது, அதில் நாம் மரிப்பதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும்”*

பின்வரும் கூற்றுடன் ஸ்டோனின் கட்டுரை முடிவுறுகின்றது:

*“சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய கிறிஸ்தவர்களின் ஊக்கமானது சுய பாதுகாப்பு காரணமாக எழுந்தது அல்ல. மாறாக எமது அயலவர்களுக்கான*

*நெறிமுறை சேவையின் நோக்காக அமைகின்றது. பாதிக்கப்பட்டவர்களை நாம் பராமரிக்க விரும்புகிறோம். ஆரோக்கியமானவர்களை நோய்க்குள்ளாக்காமல் இருப்பதையே இது முதலும் முதன்மையுமாகக் குறிக்கிறது. ஆரம்ப கிறிஸ்தவர்கள், கொள்ளைநோயின் போதான நேரங்களில் பாரமரிப்பை வழங்கும்படியாக சுகாதாரமான இடங்களாக ஐரோப்பாவில் முதலில்*

*வைத்தியசாலைகளை உருவாக்கினார்கள். நோயை இன்னும் அதிகமாகப் பரவும்படியாக விடும் அலட்சியப்போக்கானது கொலையாகும் என்பதை புரிந்தவர்களாக இவ்வாறு செய்தார்கள்."*

தொற்றுப் பரவுவதை குறைக்கும்படிக்கு முன்வைக்கப்பட்டுள்ள விதிகளை புறக்கணிக்க வேண்டும் என்றோ, நாம் சுய தனிப்படுத்தலை செய்ய வேண்டிய சூழ்நிலைகளில் அல்லது எமது இருப்பிட பகுதி ஊரடங்கினுள் இருக்கும்போதோ எம்மை (மற்றும் மற்றவர்களையும்) தேவையற்ற ஆபத்திற்குட்படுத்த வேண்டும் என்றோ இவை கூறவில்லை. மாறாக தேவன் தமது குமாரனை அவர்களுக்காக சிலுவையில் மரிக்க அனுப்பியதனால், தேவன் எவ்வாறு ஒவ்வொருவரையும் அன்புகூர்ந்தாரோ, அதேபோல நாமும் எமது உயிரினை அர்ப்பணித்து மற்றவர்களில் எவ்வாறு அன்புகூர வேண்டும் என்பதையே இதில் நாம் பார்க்க வேண்டும். அயலானை நேசித்தல் எனும்போது, கடைகளை காலியாக்கும் மற்றும் எமது அயலவர்களுக்கு இல்லாது செய்யும், உணவு மற்றும் அடிப்படை அத்தியாவசியம் தொடர்பிலான சுயநலமான வெறித்தனமான மனப்பாங்கினை தவிர்த்துக் கொள்ளுவதுமாகும்.

## நித்தியத்தை நினைவில் கொள்ளுங்கள்

நான்காவதாக கிறிஸ்தவர்கள் நித்தியத்தைப் பற்றி நினைவில் வைத்திருக்க வேண்டும். பெரும்பாலும் மறக்கப்பட்ட கிறிஸ்தவ மரபின் அம்சத்திற்கு இது வழி வகுக்கிறது. ஆரம்பக் கிறிஸ்தவர்களுக்கு, வாழ்க்கை

எதிர்பார்ப்பானது ஒப்பீட்டளவில் குறுகியதாக இருக்கும்போது, அனைத்து வகையான ஆபத்துகள் சூழ்ந்தவர்களாக வாழ்பவர்களின் நல்வாழ்விற்கு அதிகளவு பங்களிப்பு செய்யும் தியாகத்தின் வாழ்வை வாழும்படியான பெலனானது, அவர்களுக்கு இருந்த கல்லறைக்கு அப்பால் கடந்துபோகும் உண்மையான மற்றும் வாழுகின்ற நம்பிக்கையினால் கொடுக்கப்பட்டது.

சி.எஸ் லூயிஸ் இது பற்றி எழுதின வார்த்தைகள் எழுதிய காலத்தில் சிறப்பாக இருந்தது போலவே இப்போதும் இருக்கின்றன:

*"துன்பப்படுவதைக் குறித்துப் பேசுகின்ற ஒரு நூலானது பரலோகத்தைக் குறித்து எதனையும் கூறாவிடில் அது விடயத்தின் ஒரு பகுதியை மாத்திரமே கூறுகின்றதாக அமைகிறது.*

*"வேதாகமமும், பாரம்பரியமும் வழக்கமான முறையில், பரலோகத்தின் சந்தோஷத்தை, பூமியின் துன்பத்திற்கு எதிரான அளவுகோலாக முன்வைக்கின்றது. துயரம் என்னும் பிரச்சனைக்கான தீர்வைத் தராத ஒன்று கிறிஸ்தவமாக இருக்க முடியாது.*

*பரலோகத்தைப் பற்றிக் குறிப்பிடுவதற்குக்கூட வெட்கப்படுபவர்களாக நாம் தற்காலத்தில் இருக்கிறோம். 'வானத்தில் உள்ள தின்பண்டத்தைக்' குறித்த கேலி குறித்து நாம் பயப்படுகிறவர்களாக இருக்கிறோம். ஆனால், 'வானத்தில் உள்ள திண்பண்டம்' இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். அப்படி*

*இருக்கவில்லை எனில், கிறிஸ்தவம் பொய்யாகிப் போகின்றது. ஏனெனில், இந்தக் கோட்பாடானது ஒரு முழுமையான துணியாக நெய்யப்பட்டிருக்கிறது. அப்படியெனில், இந்த உண்மைக்கு முகங்கொடுத்தேயாக வேண்டும்...”* [41]

எதிர்காலம் தொடர்பிலான நம்பிக்கைகள் மற்றும் உறுதித்தன்மையைக் குறித்து முன்னோடியான கிறிஸ்தவ அப்போஸ்தலனாகிய பவுல் கூற வெட்கப்படவில்லை.

*“ஆகவே இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்..... மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.” (ரோமர் 8: 18, 38,39)*

தனது கற்கைகளின்போது சௌகரியமாக கையுள்ள நாற்காலியில் அமர்ந்துள்ள தத்துவவியலாளரின் வார்த்தைகள் அன்று. ஆனால், தனது வாழ்வில், கடுமையான மற்றும் கடினமான அனுபவங்களை அனுபவித்த ஒரு மனிதனிடம் இருந்து வந்ததாக அமைகிறது. பவுல் அநீதியாக, அடிக்கடி அடிக்கப்பட்டதுடன், சிறைவாசத்தையும் அனுபவித்தார், சில சந்தர்ப்பத்தில்

மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். இந்த வழிகளில் செல்கையில், இழப்பினையும் துன்பத்தையும் அனுபவித்தார்.

சில நேரங்களில், மகிமைக்குரிய பரலோக எல்லைகள் எவ்வாறு இருக்கும் என்று பவுலைப் போல நானும் கற்பனை செய்ய முயற்சித்துள்ளேன். என்னுள் எழுகின்ற கேள்வி இதுதான்: காண்கின்ற மற்றும் காண முடியாத உலகைப் பிரிக்கும் திரையானது ஒரு நிமிடத்திற்கு விலகி, அநீதியான அரசாங்கங்கள், போர் வீரர்கள் மற்றும் போதைப்பொருள் சீமான்களினால் கொடூரமாகக் குற்றம் சாட்டப்பட்ட அல்லது இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பெரும் கொள்ளைநோயினால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளான எண்ணற்ற கிறிஸ்தவ விசுவாசிகளின் தற்போதைய நிலையைக் காணக்கூடியதாக இருப்பின், இயேசு கிறிஸ்துவைக் குறித்து நாம் அறிந்துள்ளவை பற்றியும், சூழ்நிலைகளை தேவன் கையாள்வது பற்றிய எம்முடைய அனைத்து கரிசனைகளும் உடனடியாக கரைந்து போய்விடுமா? மற்றைய உலகத்தை நாம் இன்னும் அடையாது இருப்பினும் கூட, அதில் இருந்து வருகின்ற அது பற்றிய செய்தியை நாம் கொண்டிருக்கிறோம். வைரஸினால் தொற்றுக்குள்ளாகிய, பயப்படும் உலகமானது தீவிரமாகக் கேட்க வேண்டிய செய்தியே இதுவாகும்.

## முன்நோக்கி செல்லல்

இவ்வாறான விடயங்களைக் குறித்து எழுதுவதற்கு நான் யார்? இந்த வார்த்தைகளை வாசிக்கும் சிலர், ஒருவேளை

அநேகர் அண்மையில் தாம் நேசிப்பவர்களை இழந்து இருக்கக்கூடும் என்பதைக் குறித்த வேதனையுடன் நான் உணர்வுள்ளவனாக இருக்கிறேன். “இது தொடர்பில் இவர் என்ன அறிவார்?” என்று நீங்கள் நினைக்கக்கூடும். உண்மையான வேதனை மற்றும் வேதனை தொடர்பில் நான் அறிந்திருப்பதை விட வேறு சிலர் நன்கு அறிந்திருக்கக்கூடும். இதனால், உங்கள் இழப்பு தொடர்பில் அதிகளவு புரிதலைக் காண்பித்து, இதன் மத்தியில் இருக்கும் நம்பிக்கையை உங்களுக்கு உறுதிப்படுத்தலாம். ஜேசன் மோஸ் (தென் ஆபிரிக்காவில்) மற்றும் மைக்கல் வென்ஹம் (ஐக்கிய இராச்சியத்தில்) என்பவர்கள் வேதனையுடனான தங்கள் பயணத்தை வர்ணிக்கும் அனைத்தையும் “*I Choose Everything*” (நான் அனைத்தையும் தெரிவு செய்கிறேன்) என்ற குறிப்பிடத்தக்க புத்தகத்தில் இருந்து மேற்கோள் செய்வதன் மூலம் நான் நிறைவு செய்ய விரும்புகிறேன். அவர்கள் இருவருமே குணப்படுத்த முடியாத நோயினால் (இயக்க நரம்பியல் நோய்) வேதனையுற்றதுடன், மின்னஞ்சல் மூலமாக மாத்திரமே சந்தித்துக் கொண்டனர்.

மலை ஏறுவதை ஒத்ததாக அந்தப் பயணத்தைக் ஜேசன் குறிப்பிடுகிறார். தேவன் எவ்வாறு அவரை நிலை நிறுத்தினார் என்று நேர்மையுடனும் உறுதியுடனும் அவர் எழுதுகிறார்.[42]

*“நான் எனது மலையை பதினைந்து வருடங்களாக ஏறிக்கொண்டிருக்கிறேன். அநேகமான வருடங்கள் மலையின் அடிவாரத்தின் முகாமிலேயே கழிக்கப்பட்டன. அங்குதான் தேவன் என்னை ஆயத்தப்படுத்தினார் என்று*

*அறிந்து கொண்டேன். நான் எப்போதுமே ஏறுவது தொடர்பில் பயந்தேன். அடிவாரத்தின் முகாமே எனது இலக்கு என்று நான் எப்போதுமே யோசித்தேன். என்னால் உச்சத்திற்குப் போகக்கூடும் என்று நான் சிந்திக்கவில்லை. ஆனால், இது என்னைப் பற்றியது அல்லது என்னால் செய்யக்கூடியதொன்று அல்ல என்று என்னுடைய சுகயீனத்தினூடாக தேவன் எனக்குக் காண்பித்தார். அது எப்போதுமே அவரை பற்றியதேயாகும். 'என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே, அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என்னுடைய உயர்ஸ்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.'* [43]

*"இறுதியாக அடிவார முகாமை விட்டு நான் ஏற ஆரம்பித்தேன். தேவன் எனக்காக எவரஸ்ட்டினைத் தெரிவு செய்திருந்தார். அது நிச்சயம் இலகுவானதாக இருக்கவில்லை. எனது பாதம் பெரும்பாலும் தடுக்கிற்று. நான் அநேகமான தருணங்களில் களைப்படைந்ததாக உணர்ந்து, இதற்கு மேல் செல்ல இயலாது என்றும் சில சமயங்களில் சிந்தித்ததுண்டு. மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தாக இருந்ததோடு, என்னால் ஏற முடியாதளவு கடினமாக அமைந்தது. ஆனால், அவர் தன்னுடைய வல்லமையையும் பெலனையும் தொடர்ச்சியாக எனக்குக் காண்பித்தார். நான் களைப்படையும்போது தேவன் அங்கு இருந்தார். '... கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து*

*எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.'* [44]

*"என்னுடைய ஏற்றமானது கிட்டத்தட்ட முடிவுற்றது. மலையின் உச்சிக்கு அருகில் வந்து விட்டேன் என்று நான் நினைக்கிறேன். மலையேறுகிறவர்கள் எவ்வளவு உயரத்திற்குப் போகிறார்களோ, அந்தளவு அருகில் சிகரத்தை அடைவார்கள், அப்போது சுவாசிப்பது கடினமாகப் போய்விடும். உயரம் அதிகரிக்கையில் ஒட்சிசனின் அளவு குறைந்து, உயரத்தினால் ஏற்படும் சுகயீனத்தினால் ஏறுபவர்கள் கஷ்டமடைவார்கள். (இணையத்தளத்தின் பிரகாரம்: 'உயரத்தினால் ஏற்படும் இலேசான மற்றும் நடுத்தரமான சுகயீனமானது, தலையிடி, சுவாசிப்பதில் சிக்கல், உறங்குவதில் உள்ள பிரச்சனைகள், பசியின்மை, குமட்டல் மற்றும் இதயத்துடிப்பில் அதிகரிப்பு போன்ற அறிகுறிகள் என்பவற்றை உள்ளடக்குகிறது'.). இயக்க நரம்பியல் நோய் முற்றிக்கொண்டு போகையில் உடலின் தசைகள் பலவீனப்படும். அவ்வாறே, சுவாசத்திற்குத் தேவையான தசைகளும் பலவீனப்படுகின்றன. நான் சுவாசிப்பதற்குக் கஷ்டப்பட்டேன், வழக்கமான முறையில் தலையிடி காணப்படும். தூங்குவதில் சிரமம் மற்றும் அதிகரித்த இதயத்துடிப்பினை அடிக்கடி அனுபவித்துள்ளேன். ஆனால் இவை என்னைக் குழப்பவில்லை. ஏனெனில், நான் மலையின் உச்சியை அடைந்து விட்டேனென அறிந்திருந்தேன். ஏறும் பயணமானது கடினமாகிக்கொண்டு வரினும், நான் முயற்சிக்க வேண்டும். நான் ஏறி முடிந்த பின்பு எனக்காகக்*

*காத்திருக்கும் வெகுமதியானது, ஒருவர் செய்யக்கூடிய எந்தவொரு தியாகத்தையும் விஞ்சும் ஒன்றாக அமைகிறது. மலையேறும் யாரை வேண்டுமானாலும் கேளுங்கள்!*

*“ஆகவே இங்கு, மேலே பார்த்த வண்ணம் நான் நிற்கிறேன். முடிவானது கண்ணுக்கு நேராக இருகின்றதுடன், எனது இருதயம் உற்சாகத்தினால் ஓடுகிறது. ‘நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.” என்று சொல்லும் நாளை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறேன்.*[45]

அந்த இறுதியான வார்த்தைகள் அப்போஸ்தலனாகிய பவுலினுடையது. அவர் மேலும் இவ்வாறு கூறுகிறார்:

*“இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்” (2 தீமோத்தேயு 4:8)*

ஒரு நாள் இயேசு தோன்றுவார். நீண்ட காலங்களுக்கு முன்பு அவருடைய சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணிய நாளாக அது இருக்கும். அவர் இவ்வாறு அவர்களுக்குக் கூறுகிறார்:

*“சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்,*

*என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்." (யோவான் 14: 27-28)*

"உங்களிடத்தில் திரும்பி வருவேன்" என்று அவர் கூறினார். இந்த வார்த்தைகளைப் பதிவு செய்த யோவான், அந்த நாளில் அவருடன் இயேசு எதைக் கொண்டு வருவார் என்று யோவான் பின்பு கூறுகிறார். புதிய சிருஷ்டிப்பு அல்லாமல் வேறு எதுவும் அல்ல.

*"பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின. சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.... தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளிப்படுத்தல் 21: 1, 3b-4)*

உலகத்தை சூறையாடின கொரோனோ வைரஸ்

மற்றும் மற்றைய எல்லா கொள்ளைநோய்களும் இல்லாமல் போகும். கர்த்தராகிய இயேசுவை நேசிக்கிற அனைவருக்கும் கொடுக்கப்படும் நீதியின் கிரீடம் எப்போதும் அழியவோ மங்கவோ மாட்டாது.

பெரும் கொள்ளைநோயின் சூழ்நிலையில் சமாதானமா? இயேசுவினால் மாத்திரமே இதைத் தர முடியும். எம் அனைவருக்கும் உள்ள பிரச்சனை யாதெனில்: அவர் அவ்வாறு செய்வார் என்று நாம் விசுவாசிக்கிறோமா?

# பின்குறிப்பு

இந்த நெருக்கடியானது எழுப்பிய அனைத்து கேள்விகளுக்கும் நான் பதிலளித்து விட்டேன் என்று நான் சிந்திக்கிறேனா? இல்லை. நான் அவ்வாறு நினைக்கவில்லை. நான் இன்னும் தெளிவடைய விரும்பும் அநேக கந்தல் ஓரங்கள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பில் நான் தனிமையில் சிந்திக்க விடப்பட்டுள்ளேன். ஒரு நாள் அத்தெளிவு எனக்கு கிடைக்கும்.

> *"இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்." (1 கொரிந்தியர் 13:12)*

அதேவேளை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த பிரசங்கியான சார்ல்ஸ் ஹட்டோன் ஸ்பேர்ஜனின் அறிவுரையையும் நான் பின்பற்ற வேண்டும்:

> *"இரக்கமற்றவராக இருப்பதற்குதேவன் மிகவும் நல்லவராக இருக்கிறார், தவறு இழைப்பதற்கு அவர் மிகவும் ஞானமுள்ளவராக இருக்கிறார். அவருடைய செய்கைகளை எம்மால் கண்டுகொள்ள முடியாத போது, அவருடைய இருதயத்தை நாம் நம்ப வேண்டும்."* [46]

இதை வாசிக்கும்போது அதை செய்யும்படி உங்களை

தூண்டி இருக்க வேண்டும் என்று நம்புகிறேன் அல்லது குறைந்தபட்சமாக, முள் கிரீடத்தை சூட்டிய தேவன் இன்னும் அதிகளவிலான உங்கள் நேரம் மற்றும் சிந்தைக்குப் பாத்திரர் என்பதை இது காண்பித்து இருக்க வேண்டும். வரப்போகின்ற மாதங்களும் வருடங்களும் கொண்டு வர இருப்பவைகள் தொடர்பில் நம்பிக்கையையும் சமாதானத்தையும் தரக்கூடிய ஒருவர், நிச்சயமாக அவர் மாத்திரமே என்பது தொடர்பில் நீங்கள் இன்னும் முழுமையாக ஆய்வு செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

## முடிவுக்குறிப்பு


1 *Report of the WHO-China Joint Mission on Coronavirus Disease 2019 (COVID-19) (Feb. 2020).*
2 “NIH Director: ‘We’re on an Exponential Curve’” in *The Atlantic*, 17 Mar. 2020.
3 mphonline.org/worst-pandemics-in-history (accessed on 20 Mar. 2020).
4 *citizen.co.za/news/south-africa/courts/2256298/pray-in-groups-ofno-more-than-70-twice-a-week-forthe-sake-of-sa-mogoeng (accessed 20 Mar. 2020).*
5 *“God vs. Coronavirus” in The New York Times, 10 Mar. 2020.*
6 *theguardian.com/world/2020/mar/13/first-covid-19-casehappened-in-november-chinagovernment-records-show-report (accessed 23 Mar. 2020).*
7 *Crime and Punishment (Clayton, 2005), p 233.*
8 *Collected Letters, Vol. 3, (New York, 2000), p 520. Lewis is not saying here that creatures—humans—literally become God. He is rather referring to the fact that becoming a Christian through trusting Christ means that we are brought into God’s family as his sons and daughters (see John 1 v 12-13; John 3 v 1-21).*
9 *The Universe Next Door (IVP, 2010).*
10 *Karma (in Hinduism and Buddhism) is the sum of a person’s actions in one of their successive states of existence, which is regarded as deciding their fate in the next.*
11 *Job 42 v 7-9.*
12 *Job 1 v 13-19.*
13 *See, for example, John 9 v 1-3.*
14 *4 1 Corinthians 11 v 20.*
15 *Dialogues Concerning Natural Religion, part 10 (1779).*
16 *River Out of Eden (Basic Books, 1992), p 133.*
17 *The Brothers Karamazov (1880), book 11, chapter 4.*
18 *“Time to Stand Up” (Freedom From Religion Foundation, 2001).*
19 *Virtue Ethics (New York, 1991), p 2-3.*
20 *The Will to Power (1888), p 389.*
21 *Twilight of the Idols (Penguin, 1990), p 80-81.*
22 *The Gay Science (Vintage, 1974), p 282.*
23 *The Miracle of Theism (Clarendon Press, 1982), p 115-116.*
24 *weforum.org/agenda/2015/11/ are-viruses-actually-vital-for-ourexistence (accessed 20 Mar. 2020).*
25 *Rare Earth (Springer, 2000).*
26 *6 James 1 v 13.*
27 *I have dealt with this matter in considerable detail in my book Determined to Believe? (Lion Hudson, 2017).*
28 *Translation by D W Gooding MRIA.*
29 *The Gulag Archipelago (Collins, 1974), p 168.*
30 *Black Mass (Farrar, Straus, and Giroux, 2007), p 198.*
31 *See my Gunning for God (Lion Hudson, 2011), chapter 7, for more detail on this issue.*
32 *Acts 17 v 31.*
33 *Romans 3 v 23.*
34 *Exodus 20 v 3-17.*
35 *The Problem of Pain (Geoffrey Bles, 1940), p 81.*
36 *Leviticus 13 v 1-46.*
37 *“On Living in an Atomic Age” in Present Concerns: Journalistic Essays (1948).*
38 *foreignpolicy.com/2020/03/13/christianity-epidemics-2000years-should-i-still-go-to-churchcoronavirus (accessed 20 Mar. 2020).*
39 *As above.*
40 *As above.*
41 *The Great Divorce (Signature Classics, 2012), p 427.*
42 *I Choose Everything (Lion Hudson, 2010), p 176-178*
43 *Samuel 22 v 33-34.*
44 *Isaiah 40 v 33.*
45 *2 Timothy 4 v 7.*
46 *goodreads.com/quotes/1403154god-is-too-good-to-be-unkind-andhe-is (accessed on 20 Mar. 2020).*

இந்த புத்தகத்தை வாசித்தமைக்கு நன்றி. நீங்கள் இதை இரசித்திருப்பீர்கள் என்றும் இது உங்களுக்கு உதவியாக இருந்திருக்கும் என்றும் நாம் நம்புகிறோம்.

நாம் யார்? நாம் ஏன் இங்கு இருக்கிறோம்? நாம் எவ்வாறு வாழ வேண்டும்? என்ற வாழ்வின் பெரிய கேள்விகளுக்கான பதில்கள் தொடர்பில் பதில் தேட வேண்டும் என்று அநேக மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் அநேக நியாயமான காரணங்களினால், இவை குறித்து சாதகமாகவும் கவனமாகவும் சிந்திப்பதற்கு தேவையான நேரம் அல்லது சரியான சூழல் என்பவற்றை எம்மால் பெரும்பாலும் கண்டுபிடிக்க இயலாது உள்ளது.

உங்களுக்கு பதில் தேவைப்படும் கேள்விகளை நீங்கள் கொண்டிருக்கக்கூடும். பச்சாதாபத்தைக் காண்பிக்காத அல்லது புரிந்துகொள்ள இயலாத கிறிஸ்தவர்களை நீங்கள் சந்தித்து இருக்கக்கூடும். அல்லது விசுவாசியாக வளர்ந்து வந்த ஒருவராகவும், சில விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளும்படியாக சிறு உதவி தேவைப்படும் ஒருவராக நீங்கள் இருக்கக்கூடும்.

நாம் வழங்குகின்ற வரிசையிலான புத்தகங்கள், வீடியோக்கள் மற்றும் மற்றைய மூலவளங்களை பெறுவதற்கு எமது இணையத்தளத்தைப் பார்க்கவும்

அல்லது இயேசு யார் மற்றும் அவர் ஏன் வந்தார் என்பதற்கான தெளிவான விளக்கத்தைப் பெறும்படிக்கு www.christianityexplored.org என்ற எமது பங்குதார இணையத்தளத்தைப் பார்க்கவும்.

இதை வாசித்ததற்காக நன்றி,

த குட் புக் நிறுவனத்தில் உள்ள உங்கள் நண்பர்கள்

thegoodbook.com | thegoodbook.co.uk
thegoodbook.com.au | thegoodbook.co.nz | thegoodbook.co.in

**WWW.CHRISTIANITYEXPLORED.ORG**

நீங்கள் யாராக இருப்பினும், இந்தப் பெரிய கேள்விகளுக்கு வருகின்றபோது நீங்கள் எந்த நிலையில் இருப்பினும், எம்மால் உதவ முடியும் என்று நாம் நம்புகிறோம். பிரசுரிப்பவர்களாக, சிறந்த புத்தகமாக வேதாகமத்தை நீங்கள் பார்க்கும்படிக்கு நாங்கள் உங்களுக்கு உதவ விரும்புகிறோம். ஏனெனில், அதன் மையத்தில் நிற்கும் நபரான இயேசு கிறிஸ்துவை நாம் சந்திக்கின்றபோது எமது பெரிய கேள்விகளுக்கான தெளிவான பதில்களை நாம் கண்டடைகிறோம்.

நாம் தனித்துவமான, யுகத்தை வரையறுக்கும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமது உலகக்கண்ணோட்டம் எதுவாக இருப்பினும், எமது நம்பிக்கைகள் எதுவாக இருப்பினும் எமது பழைய உறுதிப்பாடுகள் யாவும் மறைந்து விட்டன. எம் அனைவருக்குமே, கொரோனோ வைரஸ் பெரும் கொள்ளைநோய் மற்றும் அதனுடைய தாக்கங்கள் குழப்பமானவையாகவும் அமைதியற்றதாகவும் உள்ளது. இதைக் குறித்து நாம் எவ்வாறு சிந்திக்க ஆரம்பிக்கப் போகிறோம்? எவ்வாறு சமாளிக்கப் போகிறோம்?

சிறிய ஆனால் ஆழ்ந்த அறிவை உணர்த்தும் இந்த நூலில், ஒக்ஸ்வேர்ட் பேராசிரியர், கொரோனோ வைரஸினை, வெவ்வேறுபட்ட நம்பிக்கைகளின் ஒளியில் ஆராய்வதுடன், கிறிஸ்தவர்களுடைய உலகக்கண்ணோட்டத்தை அர்த்தமுள்ளதாக்க உதவுவது மாத்திரமல்ல, அவை உண்மையான நம்பிக்கையை பற்றிகொள்ளும்படிக்கும் உதவுகிறது என்கிறார்.

“ஆழ்ந்த அறிவையளிப்பதும், அடையக்கூடியதும் மற்றும் ஆறுதல் அளிக்கின்றதுமாக உள்ளது. இது, நாம் முகங்கொடுக்கிற சவால்கள் தொடர்பில் அர்த்தத்தைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவி செய்கிறது.”
Dr பீட்டர் சான்டர்ஸ், CEO சர்வதேச கிறிஸ்தவர்களின் மருத்துவ மற்றும் பல் மருத்துவ சங்கம்

“மேற்கத்திய உலகில் ஜோன் லேநொக்ஸினுடையதைப் பார்க்கிலும் தெளிவான ஞானமான குரல் எதுவுமே இல்லை. நிதானித்து சிந்திக்க விரும்பும் அனைவருக்கும் வாசிப்பதற்கான நூலாக இது அமைகிறது.”
ஒஸ் கின்னஸ், எழுத்தாளர், அன்ஸ்பீக்கபல்

ஜோன். சி லேநொக்ஸ் என்பவர், ஒக்ஸ்வேர்ட் பல்கலைக்கழகத்தின் கணிதத்திற்கான, ஓய்வுபெற்ற பேராசிரியரும், கிரீன் டெம்பல் கல்லூரியின் ஓய்வுபெற்ற உறுப்பினருமாக இருக்கிறார். அத்துடன் ஒக்ஸ்வேர்ட் மையத்தில் கிறித்தவ நியாயவாதத்திற்கான பேராசிரியராக இருக்கிறார். ரிச்சர்ட் டோகின்ஸ், கிறிஸ்டோபர் ஹிச்சென்ஸ் மற்றும் பீட்டர் சிங்கர் என்பவர்களுடன் இணைந்து கிறிஸ்தவ விசுவாசத்தின் சார்பாக அநேக விவாதங்களில் கலந்து கொண்டிருக்கிறார். விஞ்ஞானத்தினால் அனைத்தையும் விளக்க முடிமா? என்ற புத்தகம் உள்ளடங்கலாக அநேக நூல்களின் எழுத்தாளராக இருக்கிறார்.

Colombo Theological Seminary
Resources to the Church for the Transformation of Nations

ISBN 978-1-78498-569-1
9 781784 985691

thegoodbook COMPANY
thegoodbook.com | co.uk
Christian Living / Social Issues